சகல பல் வியாதிகளையும் போக்கவல்லது
அண்ணு பற்பொடி
பாவித்த வெற்றுப் பைக் கட்டுகள் 15 அனுப்பி இனாம் பொருட்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
அண்ணு தொழிற்சாலை
இணுவில்.
தொலைபேசி: 7412

விலை சதம் 50 ★ பக்கங்கள் — 10

# ஈழநாடு
## வார மலர்
THE EELANADU VARAMALAR

மலர் 20 ஆடி 14 ஷஃபா 23 ஞாயிற்றுக்கிழமை (30—7—78) இதழ் 169

ஒலிவ்
ஸ்நானப் பவுடர்
எண்ணெய் முழுக்குச்சிறந்த ஒலிவ் ஸ்நானப்பவுடரை வாங்கி உபயோகியுங்கள். தலைமயிரிலுள்ள அழுக்கு, பேன், சொடுகு ஆகியவற்றை நீக்குகின்றது.
மில்க்வைற்
யாழ்ப்பாணம்

...Y OF SRI LANKA RECEIVED ...7-31 ... CAMPUS

# தமிழ் தேசிய மன்றம் தக்க தருணத்தில் நிறுவப்படும்

## விஷயாலோசனைகூட்டத்தில் அமிர்தலிங்கம் அறிவிப்பு

### மாவட்டமந்திரி, நம்பிக்கையில்லாதீர்மானம் பற்றிய பிரச்னைகள் விவாதிக்கப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

**தமிழ்த் தேசிய மன்றம் நிறுவவேண்டுமென்ற இளைஞர் பேரவையின் கோரிக்கையைப் பற்றி நேற்றுக் காலை நடந்த தமிழர் விடுதலைக் கூட்டணி விஷயாலோசனைக் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டு காலம் வரும் போது தக்கதருணத்தில் தமிழ்த் தேசிய மன்றம் நிறுவப் படும் என்று ஏற்றுக்கொள்ளப்பட்டதாகத் தெரியவருகிறது.**

ஆவரங்காலில் மாநாட்டுக்குச் சமீபத்திலுள்ள வீடொன்றில் அந்தரங்கமாக நடைபெற்ற இக்கூட்டத்திற்கு கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம் தலைமைதாங்கினுர்.

காலை 10-30 மணிக்கு ஆரம்பமான இக்கூட்டம் பிற்பகல் 3-30 மணிக்கு எவ்வித தீர்மானமும் எடுக்கப்படாமல் இடைநிறுத்தப்பட்டுப் பின் மாலை 6 மணிக்குக் கூடுவதென முடிவுசெய்யப்பட்டது.

தமிழ்த் தேசிய மன்றம் அமைக்கப்படவேண்டுமென இளைஞர் பேரவையினர் வலியுறுத்தியதாகத் தெரியவருகிறது.

இவ்விடயமாக தக்கதருணத்தில் முடிவெடுக்கட்டுமென எதிர்க்கட்சித் தலைவர் திரு. அமிர்தலிங்கம் இளைஞர் பேரவையினருக்கு உறுதியளித்ததாகத் தெரியவருகிறது.

அரசுக்கு எதிராகக் கூட்டணி எம். பி,க்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரவேண்டுமென இளைஞர்கள் சிலர் வலியுறுத்திக் கூறினுர்களாம்.

நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கான காரணங்கள் ஒன்றுக்கொன்று முரணுக இருப்பதாக திரு. அமிர்தலிங்கம் சுட்டிக்காட்டியபோது இளைஞர்கள் அதனை ஏற்றுக் கொண்டார்களெனத் தெரியவருகிறது.

#### நம்பிக்கையில்லாத் தீர்மானம்?

அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருவதற்கான தீர்

(9-ம் பக்கம் பார்க்க)



ஆவரங்காலில் நேற்று முற்பகல் தமிழர் விடுதலைக் கூட்டணியின் விஷயாலோசனைக் குழுக்கூட்டம் ஆரம்பமாவதற்குமுன் தலைவர் திரு. மு. சிவசிதம்பரமும் செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கமும்.
படம்;; (பிரபா போட்டோ) 'தேவா'

## ஒருபக்கம் ஆக்கிரமிப்பு மறுபக்கம் சலுகைகள்

### வரவேற்புக்குழுத் தலைவர் உரை

(ஆவரங்கால்)

ஒரு பக்கத்தில் ஆக்கிரமிப்பும் பலாத்காரமும் தொடர்கிறது. மறுபக்கத்தில் அரசு சில சலுகைகளை வழங்கி சேர்ந்து வாழப் பார்க்கிறது என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் இரண்டாவது தேசிய மாநாட்டில் வரவேற்புரை நிகழ்த்துகையில் வரவேற்புக் குழுத்தலைவர் திரு சி. கதிரவேலுப்பிள்ளை கூறினுர்.

அவர் தமது உரையில் கூறியதாவது;

சென்ற தேர்தலில்வலியுறுத்தப்பட்டு அங்கீகாரம் பெற்ற எமது கொள்கை ஆகஸ்ட், செப்டம்பரில் நடந்த இனக் கொலையின் தன்மையுடைய கலவரத்தால் மேலும் உறுதி பெற்றது. சிங்களநாட்டில் தமிழ் மக்கள் இனி வாழமுடியாது என்ற நிலைமை மிகத் தெளிவாக விளக்கம்பெற்றது. இந்திய வம்சாவழியாக ஆங்கிலேயர் காலத்தில் சிங்களநாட்டில் குடியேறிய தமிழர்கூட படு மோசமாகப் பாதிக்கப்பட்டனர். அவர்களும் இந்தியாவுக்குத் திரும்பவேண்டும் அல்லது தமிழ் ஈழத்தில் வந்து குடியேறவேண்டுமென்று நினைத்துக்கொண்டார்கள். இதை எப்படிச்செய்வது என்றுதான் பிரச்னையாகஇருக்கிறது. தமிழ் ஈழத்திற்கு வந்த ஆயிரக் கணக்கான தமிழ் அகதிகளைச் சிங்கள அரசாங்கம் தக்கஉதவி செய்யாமல் உதவி செய்பவர்

(10ம் பக்கம் பார்க்க)

SUMITOMO TYRES & TUBES
சுமிட்டோமோ ரயர், ரியூப்
A/40 சோமசெட் கார்
உரிமையாளர்களுக்கு
ஓர் நற்செய்தி
இதோ வந்துவிட்டது
5·25 X 16 ரயர், ரியூப்கள்
சிறிதளவுதான் கையிருப்பு உண்டு
உங்கள் தேவைக்கு முந்துங்கள்
கிடைக்குமிடம் :
லீடன் ரேடர்ஸ்
சேகரம் கட்டிடம்
188/3, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
9918

SUMITOMO TYRES — சுமிட்டோமோ டயர்கள்
5.25 X 16
சோமசெட், A-40 கார்களின், டயர்கள் இப்போது எம்மிடம் இருப்பில் உண்டு. அவற்றுக்கான டியூப்களும் எம்மிடம் கைவசம் உண்டு என்பதை அறியத்தருகின்றோம்.
விபரங்கட்கு :
RAMSON HARDWARE STORES
ராம்சன் ஹாட்வெயர் ஸ்டோர்ஸ்
19, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 508

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

3 ஸ்ரீ 9000 தொடர் இலக்க முடைய வெஸ்பா (Vespa 1.50 C C) ஸ்கூட்டர் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: நில அளவையாளர், 46, பிறவுண்வீதி, யாழ்ப்பாணம். (2 மணி தொடக்கம் 5 மணி வரை பார்வையிடலாம்)9907

கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கு முன்பாக கடைக்கும், கட்டிடத்துக்கும் பொருத்தமான காணி விற்பனைக்கு இருக்கின்றது! விபரங்களுக்கு: 10, செட்டித் தெரு, யாழ்ப்பாணம். 9912

## தேவை

வாசனைத்திரவியங்களை உற்பத்தி செய்யும் பாரிய திட்டம் ஒன்று அச்சுவேலி தொழில்பேட்டையில் அரசாங்க உதவியுடனும் வெளிநாட்டுக் கொம்பனியின் ஒத்துழைப்புடனும் செயல்படவுள்ளது. இதில் சிறிய பங்காளராகச் சேரவுள்ளோர் எம்முடன் உடன்தொடர்புகொள்ளவும். ரி. எம். சேவைகள், 72, காரைநகர் வீதி, யாழ்ப்பாணம். 9913

## விற்பனைக்கு

சுதுமலை தெற்கு, அண்ணுமலை வீதியில் வீடுகள், தொழிற்சாலைகள் அமைக்கக்கூடிய 17 1/2 பரப்பு பனங்காணி யாழ். நகரிலிருந்து 3 1/2 மைல். மின்வசதியுண்டு, முழுதாகவும் பிரித்தும் கொடுக்கலாம். தொடர்பு: சி. ஐயாத்துரை, அண்ணுமலை வீதி, சுதுமலை. 9915

12'' இங்கிலிஸ் கிறைன்டர், 12'' இந்தியன் கிறைண்டர், இந்தியன் கோப்பி கிறைண்டர், 7-ம் நம்பர் கல்லர், 7.5 H.P. மோட்டார் (LDC), 6 அந். எவரி தராசு, 200 மணிக்கூட்டு தராசு, 56எவரி மேசைத்தராசு 6, பிரதான வீதி, பருத்தித்துறை. 9911

## தேவை

யாழ்ப்பாணத்தில் புதிதாக தொடங்க இருக்கும் மரக்கடைச்சல் ரொய்ஸ் மெசினில் வேலைசெய்ய ஆண்களும், சித்திரவேலை செய்வதற்கு ஆற்றல் மிக்க பெண்களும் தேவை. விண்ணப்ப முடிவு திகதி 5-8-1978. கடிதமூலம் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 9010, C/o ஈழநாடுலிமிட் யாழ்ப்பாணம்' 9910

## மணமகள் தேவை

கௌரவமான யாழ். இந்து வேளாள இனப் பெற்ருேர், குணம், அழகு, நிறம், உயரம் நிரம்பிய 29 வயது மகனுக்கு (M. A. லண்டன். 1 1/2 லட்சத்திற்கு மேல் பெறுமதி. யாழ்ப்பாணத்தில் முதிசம்.) டாக்டர், அக்கவுண்டன், ஆக்கிரெக்சரர் போன்ற உயர்ந்த கல்வித் தராதரமுள்ள அழகிய இளம்பெண் தேடுகின்றனர், பிரிட்டிஷ் விசாவுள்ள பெண் விரும்பத்தக்கது. சீதனம் நீதியான ரொக்கம் போதுமானது. ஜாதகம், விபரம் முதல் கடிதத்தில்.

விளம்பர இல. 9917,
மே/பா. ஈழநாடு லிமிட்டெட்,
யாழ்ப்பாணம். 9917

## மணமகள் தேவை

யாழ்ப்பாணம் இந்து வேளாள குலத்தைச்சேர்ந்த மேல்நாட்டில் வேலைசெய்யும் 33 வயதுடைய பட்டதாரி என்சினியருக்கு 28 வயதுக்கு மேற்படாத அழகும், ஆங்கில அறிவுமுள்ள படித்த பெண் தேவை. சீதனம் முக்கியமாகக் கவனிக்கப்படமாட்டாது. சமீபத்தில் எடுத்த புகைப்படத்துடன் முழு விபரங்களையும் தரவும். விண்ணப்பங்கள் மதிப்புடன் இரகசியமாகப் பரிசிலனை செய்யப்படும். விளம்பர இல:9847, C/o ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம், 9847

### ஏர் சிலோன் லிமிட்டெட், யாழ்ப்பாணம்.

## கேள்வி அறிவித்தல்

கொழும்பு (1)

கீழ்ச்சதாம் வீதியில் ஏர் சிலோன் லிமிட்டெட் கேள்விப்பத்திர சபைத் தலைவரால் கீழ்க்காணும் கேள்விக்கான கேள்வி விண்ணப்பங்கள் ''சீல்'' வைத்த உறைகளில் ஏற்கப்படும்.

(அ) 20 பிரயாணிகள் செல்லக்கூடிய ஆசன வசதியுள்ள மோட்டார் ரதம் யாழ்ப்பாணம் ஏர் சிலோன் அலுவலகத்திலிருந்து பலாலி விமான நிலையத்திற்கு ஏற்றிச் சென்று திரும்புவதற்காக வாடகைக்குத் தேவைப்படுகிறது. தினசரி மூன்று அல்லது நான்கு பயணங்கள் உண்டு.

(ஆ) சென்று திரும்புவதற்கான பயணம் ஒன்றிற்கான விகிதம் --- ரூ. 75/-

(இ) வாகனம் தேவைப்படக்கூடிய காலவரை சுமார் ஒரு மாதம்.

(ஈ) தேவைப்படும் திகதி --- 1978 ஆகஸ்ட் 10-ந் திகதி.

(உ) கேள்வி விண்ணப்பங்கள் முடிவுறும் காலம் 1978, ஆகஸ்ட் 4-ந் திகதி முற்பகல் 10 மணி.

மேல் விபரங்களுக்கு- தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

நிலைய முகாமையாளர்,
**ஏர் சிலோன் லிமிட்டெட்,**
இல. 17, முதலாம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம்.

இல. 17, முதலாம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 288
நேரடித் தொடர்பு: 7636 9905

# குடிகாரனை மணக்கமறுத்த பெண்ணுக்கு அதிர்ஷ்டம்

குடிகார மாப்பிள்ளையை மணமுடிக்க மறுத்துவிட்ட அந்தப் பெண்ணுக்கு தமிழ் நாடு அரசு 1001 ரூபாய் பரிசு வழங்கியிருக்கிறது.

தமிழ்நாட்டில் காஞ்சிபுரத்தைச்சேர்ந்த மஞ்சுளா என்ற அந்த இளம்பெண் தான் மணமுடிக்கவிருந்த இளைஞன் குடித்து வெறித்து வந்ததால் அவனை வெறுத்து ஒதுக்கிவிட்டார். கல்வியறிவு இல்லாத பட்டிக்காட்டுப் பெண்ணுக இருந்தாலும் குடிகாரனை மணமுடிப்பதில்லையென்று மிகவும் கண்டிப்பாக மறுத்து விட்டார். திருமண வீட்டிற்கு வந்திருந்தவர்களில் பலரும் அப் பெண்ணின் கொள்கைப்பற்றைப் பாராட்டினுர்கள். அவர்களில் ஒருவரான படித்த இளைஞர் ஒருவர் அப்பெண்ணுக்கு கைகொடுக்க முன் வந்தார். திருமணத்துக்காக ஏற்பாடு செய்திருந்த பந்தலில் அதே முகூர்த்தத்தில் சேகர் என்ற 21வயது இளைஞர் அப் பெண்ணைக் கைப்பிடித்தார்.

இது நடந்த சில தினங்களில் தமிழ்நாடு கவர்னர் பிரபுதாஸ் பட்வாரி காஞ்சிபுரம் வந்திருந்தபோது அந்தப் புதுத் தம்பதிகளை அழைத்து பெண்ணின் மன வைராக்கியத்தைப் பாராட்டி கவர்னரின் சுமூகநல உதவி நிதியிலிருந்து 1001 ரூபாவைப் பரிசாக வழங்கினுர். அந்த இளைஞர் தமக்கு தொழில் ஏதாவது கிடைக்க ஏற்பாடு செய்யும்படி விண்ணப்பம் ஒன்றைக் கவர்னரிடம் கொடுத்தார். வேலை கிடைத்தபிறகே திருமணம் முடிப்பதாக இருந்ததாகவும், சந்தர்ப்ப சூழ்நிலைகள் அதற்கு முன்பே மணமுடிக்கச் செய்துவிட்டதாகவும் அவர் தெரிவித்துக் கொண்டார் அங்கே வந்திருந்த வங்கி

(10-ம் பக்கம் பார்க்க)

## WANTED

Vacancy for Typist/Clerk with good knowledge of English. Siva's Travel Service, 11/A, Momsac Building, Stan'ey Rd, Jaffna. 9921

கைதடியில்

## இந்து அறச்சாலைகள் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை இந்து அறச்சாலைகளின் ஒன்றியப் பிரசாரக் கூட்டம் கைதடி இலங்கைச் சைவஅநாதை இல்லத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெறவிருக்கிறது.

கரவெட்டி பரமானந்த ஆச்சிரமசுவாமி பரமானந்தா தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் ஆத்மஜோதி ஆசிரியர் திரு. நா. முத்தையா பருத்தித்துறை நீதவான் திரு. க. ஞானச்சந்திரன் கிளிநொச்சி குருகுலம் திரு. வே.கதிர்வேலு திருமலை சிவானந்த தபோவனம் திரு. எஸ். கந்தையா ஆகியோர் சிறப்புரை வழங்குவர். (அ)

......

## திருட்டு முயற்சி தோற்றதால்...

(பண்டத்தரிப்பு)

நள்ளிரவு நேரத்தில் வீடொன்றில் ஆடுதிருடும் நோக்கத்துடன் வந்த திருடர்கள் தங்கள் திட்டம் சரிவராது போகவே வீட்டிலிருந்த வயோதிபரைத் கற்களால் தாக்கிப்படுகாயம் விளைவித்து விட்டு தப்பி ஓடிவிட்ட சம்பவம் அளவெட்டியில் நடைபெற்றுள்ளது. தாக்குதலுக்குள்ளான சின்னத்தம்பி என்னும் 72 வயது வயோதிபர் தலையில் பலத்த காயங்களுடன் யாழ்ப்பணம் அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சுன்னுகம் பொலிசார் இத்தாக்குதல் நடாத்தியவர்களைத் தேடிவருகின்றனர். இதுவரை இச்சம்பவம் தொடர்பாக எவரும் கைது செய்யப்படவில்லை.

......

## வருடாந்த பொதுக் கூட்டம்

(வண்ணுர்பண்ணை)

புத்தூர்-ஆவரங்கால் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவு கிராமாபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. ஏ. பிரடரிச் தலைமையில் நடைபெற்றது.

மேற்படி கிராம முன்னேற்றச் சங்க மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பின்வருவோர் புதுவருட உத்தியோகத்தர்களாகத் தெரியப்பட்டனர்.

தலைவர்- திரு. சு. சின்னத்துரை, உப தலைவர்- திரு. சி. அரியகுட்டி, காரியதரிசி- திரு. சோ. பாலசிங்கம், உப காரியதரிசி- திரு. கா. சிவசோதி, பொருளாளர்- திரு. தி. கமலநாதன், எண்பார்வையாளர்- திரு. சி. சிவசுப்பிரமணியம். (க)

### இன்று தொடக்கம்

## விசேடமாக விற்பனையாகின்றன

இறக்குமதி செய்யப்பட்ட வெளிநாட்டு வர்ணம் திட்டப்பட்ட

- நைலெக்ஸ் சேலைகள் ரூபா 89/50 சதம்
- வர்ணம்திட்டப்பட்ட சித்தை ரூபா 7/25 சதம்
- வெள்ளைப் பப்லின் ரூபா 7/50 சதம்

இன்றே விஜயஞ்செய்யுங்கள் எங்களிடம்,

**க. நாகமுத்து அன் சன்**

48-50, பெரிய கடை — யாழ்ப்பாணம். 9922

## நைலோன் மீன்பிடி வலைகள்

ஜப்பான் வலைகள்

| இழை | இஞ்சி | இழை | இஞ்சி |
|---|---|---|---|
| 2 - | 1/2'' | 2 - | 1 1/10'' |
| 2 - | 5/8'' | 2 - | 1 3/16'' |
| 2 - | 9/10'' | 2 - | 2'' |
| 2 - | 1'' | 4 - | 2 1/4'' |

கொறியர் வலைகள்

| இழை | இஞ்சி | இழை | இஞ்சி |
|---|---|---|---|
| 12 - | 3 1/2'' | 21 - | 3 1/2'' |
| 15 - | 3 1/2'' | 24 - | 5'' |
| 15 - | 3 3/4'' | 24 - | 5 1/2'' |
| 15 - | 4'' | | |

கிடைக்குமிடம் :

**லீடன் ரேடர்ஸ்**

சேகரம் கட்டிடம்
188/3, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 9919

## இப்பொழுது வாங்கலாம்



பிரவுண்சனின் இன்னுமோர் தரமான தயாரிப்பு

**பிரவுண்சன் அரறூட்மா**

குழந்தைகள் வயோதிபர்கள் நோயுற்றிருக்கும் போது டாக்டர் அரறூட் கஞ்சி அருந்தும் படி சிபாரிசு செய்தாலும், தேகாரோக்கிய உணவு வகை தயாரிப்பதற்கு வேண்டி, நீங்கள் அரறூட்மா வாங்கினுலும் நீங்கள் வாங்குவது உண்மையான 100% அரறூட்மா என்பதை உறுதிப்படுத்த பிரவுண்சன் அரறூட் மாவை தேர்ந்தெடுங்கள்

இறக்குமதிசெய்து விநியோகிப்பவர்கள்:
பிரவுண்சன் இன்டஸ்ரீஸ்
80 1/4 பிறைஸ் பிளேஸ் கொழும்பு 12 தொலைபேசி: 27197

பிரவுண்சன் அரறூட் அரச உணவு மருந்துச் சட்டத்தின் கீழ் உத்தரவாதப் படுத்தப்பட்டது.



"என் ஆருயிர்க் காதலர்-பல வருடங்கள் என்னை உயிருக்குயிராக நேசித்தவர்-அவரை நான் 'ரேட்' கொடுத்தா வாங்க வேண்டும்?"

-மலிஹா வாய்விட்டுச்சிரிக்கிறாள்.

# அவள் கூறிய பதில்!

கலைவாதி கலீல்

"இங்கே! இங்கே" என்று கூறிக்கொண்டிருந்தவள், அவனைப் பெயர் சொல்லியே அழைத்துவிட்டாளே! அது ஒரு வேதனை தான் அவளுக்கு. ஆனால் அவன் அதைப் பற்றிக் கவலைப்படவேயில்லை. அப்படி அவள் என்னதான் கூறிவிட்டாள், மிஸ்டர் ஜலீல்! என்னை நீங்கள் கல்யாணம் செய்வதாயிருந்தால்... தவறு தவறு! நான் உங்களைக் கல்யாணம் செய்வதாயிருந்தால் ஒரு சல்லிக்காசு கூட சீதனமாய் தரமாட்டேன். இது என்னுடைய இலட்சியம்! விருப்பமென்றால் ஏற்றுக்கொள்ளலாம். அல்லது என்னைவிட்டு விலகிச் செல்வதைப் பற்றி எனக்கு எந்த வித கவலையுமில்லை. நீங்கள் இதையிட்டு வேதனைப்படாமலிருந்தால் போதும்".

"சே! என்ன மாதிரி முகத்தில் அறைந்துவிட்டாள் வார்த்தையால்! அதைவிடச் செருப்பால் அறைந்திருக்கலாமே! ஏன் அதைச் செய்யவில்லை."

அவள் வீட்டுக் கதவைப் படீரென்று அடித்துச்சாத்திய படி வெளியேறினாள். அவன் முகம் 'ஜிவு ஜிவு' என்று சிவந்திருந்தது. ஆத்திரத்தில் அவன் பற்களை நர நர வென்று கடிக்கிறான். அவனுக்கு ஆத்திரம் ஏற்பட்டால் கையில் இருக்கும் அல்லது கண்ணில் தட்டுப்படும் எந்தப் பொருளென்றாலும் அது எவ்வளவு விலை உயர்ந்ததென்றாலும் தூக்கி எறிந்து உடைத்துத் தள்ளிவிடுவான். அது அவனுடைய சுபாவம். இன்று அவனுக்கு வந்த ஆத்திரத்தில் என்ன சொல்வதென்றே தெரியவில்லை. அவள் அவனுடைய ஆருயிர்க்காதலி, உயிருக்கு உயிரானவள்; அப்படிச் சொல்லியிருக்கக்கூடாது. சொல்லிவிட்டாள், அதுவும் எவ்வளவு அழுத்தந்திருத்தமாகக் கூறிவிட்டாள். ஆழ்ந்த சிந்தனையின் பின்னர் எடுக்கப்பட்டுள்ள தீர்க்கமான முடிவு, அவளது பதிலில் தொனித்தது. அவனுக்கு அழுகை அழுகையாக வந்தது.

அவள் முகத்தில் தொனித்த உறுதியைக் கண்டு அவன் அதிர்ந்தேவிட்டான். அவள் குழந்தையல்ல! பொழுது போக்காய் வாழ்ந்து கொண்டிருக்கும் உல்லாசச் சிட்டல்ல என்பது அவளது பதிலிலிருந்து தெரிந்தது!

அவனும் அவளும் ஒன்றாகத்தான் படித்தார்கள். மன்றிலுள்ள ஒரு பிரபலமான முஸ்லீம் கல்லூரியில், அவன் மேல் வகுப்பு, அவள் கீழ் வகுப்பு. எவ்வாறோ அவர்களது அன்பு மலர்ந்தது. அவன் அவ்வளவு அழகன் அல்ல; சுமாரானவன்! ஆனால் அவளோ... பனித்துளியில் 'கம்' மென்று மலர்ந்து மணம் பரப்பும் மல்லிகை! பெயர்கூட மலிஹா தான். அன்பு, காதலாகப் பரிணமித்தது. அது பிரிக்கமுடியாத இறுக்கமானபிணைப்பாக மாறிவிட்டது.

படிப்பு முடிந்தது. வழமை போல நட்பு முறிந்துவிடவில்லை. கல்லூரியுடன் அது ஒரு தொடர்கதையாய் ராகங்கள் மீட்டின. அவனுக்கு உத்தியோகம் தேடி வந்தது. அப்போதும் அவள் படித்துக் கொண்டிருந்தாள் - அவளும் எஸ். எஸ். ஸி. சித்தியெய்தியதும் ஆசிரியை வேலை அவளை அணைத்துக்கொண்டது.

இனியென்ன! இருமனம் ஒருமனமாகி விட்டதே. திருமணம் தான்! ஆனால் ஜலீலின் தாய்- தந்தையர் ஜலீலுக்குப் பெண்தேடத் தலைப்பட்டனர். அது ஊரின் வழமையும் கூட. பையன் நல்ல உத்தியோகம்! புகழ்பூத்த குடும்பமும் கூட. தேடிவரும் திரவியத்திற்குக் குறைவா இருக்கப் போகிறது!

குறைந்தது பத்தாயிரம் ரூபா சீதனம். பெண்ணுக்குப் பத்துப் பவுனில் நகை, தனி வீடு... இப்படிப் பல பல. பலாபலன்களை விரும்பினர், ஜலீலின் பெற்றோர். இதைக் கொடுக்கவும் எத்தனையோ பேர் கியூவில் நின்றார்கள். ஜலீலின் பெற்றோர்களுக்கென்ன ஊர் உலகிற்கே தெரியும், ஜலீலும் மலிஹாவும் ஒருவரை ஒருவர் உயிருக்குயிராய் நேசிப்பதை! இருந்தாலும் வலிய வரும் ஸ்ரீதேவியை உதைத்துத்தள்ளிவிட்டு ஒழுங்கான வீடு வாசல்கூட இல்லாத ஏழைக் குடும்பத்தில் பெண் எடுப்பதா? மேலும் அந்தக்குடும்பத்தில் குமருகள் வேறு கூட.

"அவள் டீச்சரல்லவா"

டீச்சரா இருந்தால் என்ன? குடும்பம் தரித்திரம் தரித்திரம் தானே! எனவே ஜலீலின் வீட்டில் பலத்த எதிர்ப்புப் புயல் வீசத் தொடங்கியது. ஆனால் ஜலீல் மிகவும் உறுதியாக நின்றான். "மணந்தால் மலிஹாவையே மணப்பேன். அல்லது பிரமச்சாரியாகவே இருப்பேன்" என அழுத்தந்திருத்தமாக அறிவித்துவிட்டான். பெற்றோருக்குத் தர்மசங்கடமாகப் போய்விட்டது. ஜலீலின் உறுதியை உடைத்தெறிவது என்பது நடக்கக்கூடிய காரியமாகத்தெரியவில்லை. "நாங்கள் என்னப்பா! அந்த டீச்சரைக் கல்யாணம் செய்ய வேண்டாமென்று சொல்கிறோம். இல்லையே! நாங்க கேட்ட சீதனம்ஆதனத்தைத்தந்திட்டு இந்த வீட்டுக்கு மருமகளா வரட்டுமே!" என்று ஜலீலுடைய தந்தை கூறினார்.

சீதனம் கூடிவிட்டது என்று ஜலீல் வாதிட்டான்.

"என்னப்பா நீ! உனக்காக லட்சம் லட்சமாகக் கொட்டியிருக்கிறோம். அப்படியே அள்ளிக் குடுத்துதிட முடியுமாப்பா. அவட வாப்பாவை என்ன வந்து பார்க்கச் சொல்லு"

மறுநாள் அவளது வாப்பாவும் வந்தார். பலத்த வாதங்களின் பின்னர் சீதனத் தொகை குறைக்கப்பட்டது. அவர்கள் பெண்வீட்டார் 5000 ரூபாய் தருவார்களாம். நகையும் ஏழு எட்டுப்பவுணில் போடுவார்களாம். ஏதோ சிறியவீடொன்றைக் கட்டித்தருவார்களாம். இவள் டீச்சராக இருப்பதனால் மாதா மாதம் ஏதோ உழைப்பதனால்தான் இந்தச் சலுகை. அவனுடைய வாப்பா உம்மா சம்மதித்ததே பெரிய கைங்கரியம்!

மகிழ்ச்சிகரமான இதை அவளிடம் கூறுவதற்காக மலிஹா வீட்டுக்குச் சென்றான் அவன்,

சிரித்தமுகத்துடன் மகிழ்ச்சிகரமாக வரவேற்கிறாள் அவள். அவளுடைய அகன்ற பெரிய ஆழமான கண்களையும் சிரிக்கும்போது பளிச்சிடும் வெண் பற்களையும் இன்றைக்கெல்லாம் பார்த்துக்கொண்டே இருக்கலாமே! இனிஇவள் சட்டப்படி என் சொத்தாகி விடுவாள்.

முழுச்சம்பவங்களையும்கூறுகிறான். அவள் அமைதியாக அனைத்தையும் கேட்டுக்கொண்டிருக்கிறாள். எந்தப்பதிலும் சொல்லவில்லை. அவளுடைய முகம் தொய்ந்துவாடி இருக்கிறது. ஜலீல் துணுக்குறுகிறான். 'மலிஹா மலிஹா! ஏன் இப்படி இருக்கிறீங்க. இது உங்களுக்குச் சந்தோஷமா இல்லையா... இன்னும் கொறைக்கோணுமா 'ரேட்'டை". அவள் உயிரற்ற சிரிப்பொன்றை உதிர்க்கிறாள். அவள்சொன்ன அந்த 'ரேட்' என்ற சொல்தான் அவளது சிரிப்புக்குக் காரணமாகும்.

என் ஆருயிர்க் காதலன் பல வருடங்களாக என்னை உயிருக்குயிராக நேசித்துவந்தவரை நான் 'ரேட்' கொடுத்துவாங்க வேண்டும். அதையும் குறைக்கத் தயாராம். மீண்டும் சிரிக்கிறாள். அவனுக்கு எரிச்சல் எரிச்சலாய்வருகிறது 'மலிஹா என்ன இது' என்று அலுத்துக் கொள்கிறான். 'உங்களைச் சில கேள்விகள் கேட்கட்டுமா?' அவன் அவளை வியப்போடு பார்க்கிறான். 'தாராளமாய்க் கேளுங்கள்' அவள் முகத்தில் உறுதி தொனிக்கிறது. 'நீங்களும் நானும் எத்தனை வருடங்களாகக் காதலிக்கிறோம்.

அவன் பலத்த யோசனையுடன் பதில்கூறுகிறான். ஏன்! பாடசாலையில் படிக்கும்காலத்திலிருந்தே.

"அதுதான் எத்தனை வருடம் இருக்கும்"

"ஏழெட்டு வருடம்"

"உண்மையான காதல் தானே!"

"இதென்ன விசர்க்கேள்வி"

"இல்லை... என்னையா அல்லது என் பணப் பெட்டியையா காதலித்தீர்கள் என்று யோசித்தேன்."

"மலிஹா"-அவன் சீறுகிறான். என்னை அவ்வளவுமோசமாக நினைத்துக்கொண்டாய்!

இவ்வளவு வருடங்கள் பழகியும் என்னைப் புரிந்துகொள்ள முடியவில்லை உன்னால்"

"அதுதான் நானும் ஆச்சரியப்படுகிறேன்! இவ்வளவு வருடங்கள் பழகியும் என்னைப் புரிந்துகொள்ள முடியவில்லையே உங்களால்"

"நீங்கள் ஒரு முற்போக்கு வாதிதானே!

'அதிலென்ன சந்தேகம்'

'அப்படியென்றால் சீதனம், ஆதனம்'

'அதெல்லாம் ஊர்வழமைக்கு'

'என்பிடிவாதம் உங்களுக்குத் தெரியும்தானே'

'யோசிக்காதீங்க உங்க வாப்பாவே சம்மதிச்சுட்டாங்க'

'அவங்கட்ட பணம்இல்லை'

'நான் கொஞ்சம் பணம் குடுக்கிறேன்'

'உங்கட பணத்திலே உங்களை வேலைக்கு வாங்கவா?'

'பைத்தியம் பைத்தியம் இதெல்லாம் ஒரு போலிசம்பிரதாயம் தானே'

'போலியைத் தூக்கி எறிந்தால் என்ன? ஒரு நிமிடம் மௌனம். மீண்டும் அவளே பதில் தருகிறாள். 'நீங்கள்என்னைக் கல்யாணம் செய்வதாயிருந்தால் நான்ஒரு செப்புக் காசும் தரமாட்டேன்'

'என்ன!'

"என் பிடிவாதம் உங்களுக்குத் தெரியும்தானே'

'என்ன சொல்றீங்க!'

'உண்மையைத்தான் சொல்றேன், நான் காசுகொடுத்து உங்களை வாங்கவே மாட்டேன்'

'உனக்கென்ன பைத்தியமா பிடித்திருக்கு'

'இனிமே பிடிக்காமல் இருந்தால்சரி, இதுதான் என் இறுதிமுடிவு என் பிடிவாதம் தெரியும்தானே நீங்கள் போகலாம்'

'நான் உனக்குப் பின்னாலே பூனைக்குட்டியைப்போல சுற்றிச்சுற்றி வர்றேனே என்றுதானே இப்படிச் செய்கிறாள்'

'அதெல்லாம் இல்லை! என் இலட்சியம்!'

'அப்ப நம்ம கல்யாணம் வெறும் கதைதான்'

'அதைப்பற்றி கவலையில்லை'

'நீ வேறு யாரையோவிரும்புறா' அவள் விரக்தியுடன்சிரிக்கிறாள்... அவளே தொடர்கிறாள் -- 'பெறகென்ன உங்க வாப்பா சம்மதிச்சிட்டாரு. நான்கூட பணஉதவி செய்கிறதென்று சொல்றேன்! அதுக்கு மேலே...' அவள் முகத்தில் உறுதி தொனிக்கிறது.

'ஒருசதமும் கொடுக்காமல் தான் நான் கல்யாணம்செய்து கொள்வேன்'

'அப்படிப்பட்டவன் இந்த உலகத்தில்...'

'இல்லாமலா போய்விடுவான்...'

'யாரது! யாரது!! உனக்கொரு கள்ளக் காதலன்'


'சட் அப்'

அவள் சரியான பிடிவாதக்காரி. அவள் சொன்னால் சொன்னதுதான். 'நீங்கள் போகலாம். சீதனம் வேண்டாம் எண்டால்வரலாம்!...ம்' -விருட்டென எழுந்து அறைக்குள் நுழைகிறாள். குமுறிக் குமுறி அழுகிறாள்.

ஜலீல் ஆத்திரத்துடன்வெளியேறுகிறான்.

சற்றுநேரத்தில் அழுகை நிற்கிறது! உறுதியுடன் எழுகிறாள்! இலட்சியத்துடன் வாழ்ந்துகாட்டுவதற்காக.

(யாவும் கற்பனை)



# பனஞ்சீனியிலிருந்து புது வகை குளிர்பானம்

## தமிழ்நாடு அரசு தயாரிக்கிறது

புதுடில்லியில் உள்ளவர்கள் மிகவிரைவில்பனையிலிருந்து தயாரிக்கப்படும் இரு புதிய பானங்களை சுவைக்கவிருக்கிறார்கள். இந்தப் பானங்கள் தமிழ்நாட்டில் தயாரிக்கப்படுபவையாகும்.

பாம்கோலா, பாம்டா ஆகிய இந்த இரு குளிர்பானங்களும் இப்பொழுது சென்னையில் கிடைக்கின்றன. மதுரை, திருச்சி, சேலம், கோயம்புத்தூர்- தமிழ்நாடெங்கிலும் இவை கிடைக்கின்றன.

தமிழ்நாடு அரசு பனம் பொருள் உற்பத்தி கூட்டுறவு சம்மேளனத்தினால் தயாரிக்கப்பட்டுள்ள இந்தக் குளிர்பானங்கள் ஏற்கனவே மிகத் தரமானவை என மத்திய ஆராய்ச்சி நிலையமும் அறிவித்துள்ளது.

இந்தியாவில் சமீப காலம் வரை மிகப் பிரபல்யமாக இருந்துவந்துள்ள கொக்கா கோலாவைவிட இந்தப்பானங்கள் சுவையாகவிருப்பதாகக் கூறப்படுகின்றது.

பனஞ்சீனியிலிருந்து இந்தக் குளிர்பானங்கள் தயாரிக்கப்படுகின்றன. இதற்கு இந்தியா முழுவதும் அதிக கிராக்கி இருக்குமென்று கருதப்படுவதால் பதநீரை அதிகமாக உற்பத்திசெய்வதற்கான திட்டங்களைத் தமிழ்நாடு அரசு செயல்படுத்தவிருக்கின்றது. இந்தியாவில் தற்பொழுது 6 கோடி பனைமரங்கள் இருக்கின்றன. இவைகளில் 50 ஆயிரம் மரங்களே பதநீருக்கு பயன்படுத்தப்படுகின்றன.

மேலும் பல பனைவெல்லத் தொழிற்சாலைகளை ஆரம்பிப்பதன்மூலம் பதநீர் உற்பத்திக்கு மேலும் அதிகமரங்களைப்பயன் படுத்தலாம் என்றும், அதன் மூலம் இந்தகுளிர்பானங்களின் உற்பத்தியையும் பெருக்கமுடியும் என்றும் தமிழ்நாடு அரசு கருதுகின்றது. இத்திட்டங்களின்மூலம் வேலைவாய்ப்புக்கள் அதிகரிக்கும் என்றும் கருதப்படுகின்றது.

கொச்சியில் உள்ள ஒரு தனியார் நிறுவனத்திடம் இருக்கும் போத்தல் அடைக்கும் யந்திரக் கருவியை தமிழ்நாடு அரசு விலைக்கு வாங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது 20,000 போத்தல்களை அடைக்கும் திறமைகொண்டதாம் இந்த யந்திரம்.

## மணமகளின் வெறுப்பு!

விடிந்தால் திருமணம். அதற்குள் அவசரம் பொறுக்கமுடியவில்லை அந்த இளைஞனுக்கு. நன்றாகக் குடித்துவிட்டு மணமகள் வீட்டுக்குப் போனான்.

திருமணத்துக்கான ஏற்பாடுகள் நடந்துகொண்டிருந்த சந்தடியில் மாப்பிள்ளை மதுவெறியில் வந்து நிற்பதை மணப்பெண் எப்படியோதெரிந்துகொண்டு விட்டாள். அவ்வளவுதான். இந்த மாப்பிள்ளை வேண்டவே வேண்டாம் என்று கண்டிப்பாகக் கூறிவிட்டாள். உறவினர்கள் எவ்வளவு மன்றாடியும் முடியவில்லை. குடிகாரனை மணாளனாக அடைய அவள் மறுத்துவிட்டாள். தமிழ்நாட்டில் காஞ்சிபுரத்திலுள்ள ஒரு கிராமத்தில் இச்சம்பவம் நடந்தது.

# ஐம்பதாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட மூநாடு நாகரிகம் தமிழனுடையது

## உடுப்பிட்டியூர் கே. எஸ். சிவலிங்கம்

> "இன்று உலகம் முழுவதும் சுமார் ஏழரைக் கோடி தமிழர் வாழ்கிறார்கள். ஆனால் இவர்களுக்கென்ற ஒரு தனியான நாடு கிடையாது. ஒரு காலத்தில் முதன்மையான நாகரிகத்துடன், முதன்மையான அரசு நடத்திய இனத்தின் நிலையை எண்ணும்போது வேதனை ஏற்படாமலிருக்குமா?"

உலகிலே எத்தனையோ இனங்கள் காலத்திற்குக் காலம் தங்களுடைய நாகரிகங்களை வளர்த்திருக்கிறார்கள். உதாரணமாக, "முனிசியர் நாகரிகம் கி. மு. 2000-1000, கிரேக்க நாகரிகம் கி. மு. 3000-2000, எகிப்திய நாகரிகம் 3000 ஆண்டுகளுக்கு முற்பட்டது. அசிரிய நாகரிகம் கி. மு. 4000ம் ஆண்டுகளுக்கு முற்பட்டது. சிந்து நதி நாகரிகம் கி. மு. 5000ம் ஆண்டுகளுக்கு முற்பட்டது, இந்த நாகரிகங்கள் எல்லாவற்றிற்கும் முற்பட்ட நாகரிகம்தான் "மூநாடு" நாகரிகம். "இலெமுறியா" நாகரிகம். தமிழ்மொழியின் இலக்கிய, இலக்கணங்களின் வளர்ச்சியையும், செழுமையையும் வைத்து ஆராய்ந்த ஆராய்ச்சியாளர்களின் முடிவின்படி மூநாடு இலெமுறியா நாகரிகங்கள் இற்றைக்கு ஐம்பது ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட "தமிழனுடைய" நாகரிகம் என முடிவுகொண்டுள்ளனர்.

### மூநாடு

தமிழனின் பூர்வீகம் என்னும் முத்தமிழை வளர்த்த தமிழ் நாடு என்பது இன்று நாம் குறிப்பிடும் தமிழ்நாடு தானா? அல்லது கடலோடுகடலாகிவிட்டதா? மூநாடு என்பது எது? அதுதான் மறைந்த தமிழ்க் கண்டமா? இது எங்கே இருந்தது? இவை எல்லாவற்றையும் ஆராய்ச்சியாளர்கள் காலத்திற்குக் காலம் ஆராய்ந்து இறுதியில் 'மூநாடு' 'இலெமுறியா' ஆகிய இரு மறைந்த கண்டங்களும் பண்டைத் தமிழ் நாடு என முடிவு கொண்டனர்.

தென் புலியூர் திரு. மு. கணபதிப்பிள்ளை அவர்கள் தனது 'தமிழன் எங்கே' என்னும் ஆராய்ச்சி நூலிலே மூநாடுதான் மிகப் பழைய நாடு எனவும் 'மூவன்' அல்லது மூவன் என்னும் பெயர் அந்நாட்டால் ஏற்பட்ட பெயர்கள் எனவும் மூநாட்டுமக்கள் கடலோட்டத்திலும் திறமை வாய்ந்தவர்களாய் விளங்கினர், அவர்கள் பெயரே "Moor" எனக் கடலோட்டு வதைக் குறிக்கும் சொல்லாக மேல்நாட்டு அகராதிகளிலும் ஏறிவிட்டது எனவும், மூவேந்தர்கள் மூ நாட்டு மன்னர்கள் எனவும், மூவேந்தர் என்னும் வழக்கிலுள்ள 'மூ' என்பது நாட்டினையே குறிப்பதெனவும் குறிப்பிட்டனர். தனது கொள்கைக்குச் சான்றாகத் தமிழ் இலக்கியப் பரப்பிலிருந்தும், சமஸ்கிருத நூல்களிலிருந்தும் பாளி, சிங்கள இலக்கியங்களிலிருந்தும் பிறமொழி வழக்குகளிலிருந்தும் சாசனங்களிலிருந்தும் எடுத்துக் காட்டுகள் தந்துள்ளார்.

### கடல்கொண்ட 'மூ' கண்டம்

அமெரிக்க நாட்டிலுள்ள நியூயோர்க் நகரினைச் சார்ந்த ஆராய்ச்சிப் பேரறிஞர் 'கேணல் ஜேம்ஸ் சேர்ச்வாட்' (Crlonel James Churchward) அவர்கள் தாம் ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்டிருக்கும் 'கடல்கொண்ட மூகண்டம்' (The lost continant of Mur) என்னும் ஆராய்ச்சி நூலிலே தமிழனுடைய நாகரிகம் கொண்ட மூநாடுபற்றித்தெளிவாகப் பின்வருமாறு விளக்கியிருக்கிறார்.

### உலக சிருஷ்டி

உலக சிருஷ்டி பற்றிப் பைபிளிலே கூறப்படும்கதை, நைல் நதிக்கரையிலோ, யூபிறேற்றிஸ் பள்ளத்தாக்கிலோ தோன்றியதன்று. கடல் கொண்ட மூநாட்டிலிருந்தே எழுந்து பரந்ததாகும். 6 கோடியே 40 லட்சம் மக்களைக் கொண்டதும், 50 ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதுமாகி இந்த அதிசய நாட்டிலே எமது இன்றைய நாகரிகத்திலும் பார்க்க எல்லா வகைகளாலும் சிறப்புற்றதொரு நாகரிகம் நிலவிக் கொண்டிருந்ததெனக் கூறும் அப்பட்டயங்களும் பதிவேடுகளும் அந்த அதிசய நாட்டிலேயே மக்களினம் தோன்றிற்று என நிலைநாட்டுகின்றன. உலக நாகரிகத்திற்கும் கல்விக்கும், வணிகத்திற்கும் அந்நாடே மத்திய தானமாகவும் மூலத் தாயகமாகவும் நிலவியது. உலகத்திலுள்ள பிறநாடுகள் எல்லாம் அதன் குடியேற்ற நாடுகளாகவோ, குடியேற்றச் சக்கராதிபத்தியங்களாகவோ விளங்கிக்கொண்டிருந்தன. மூநாட்டின் தொன்மை சான்ற மக்கள் புகழ்வாய்ந்த கடலோடிகளாகவும், மாலுமிகளாகவும் திகழ்ந்து உலகத்தின் எல்லாப் பாகங்களுக்கும் திரையூர்ந்து சென்றிருக்கின்றார்கள்.

அவர்கள் கல்வியறிவுமிக்க சிற்பக் கலைஞர்களாக விளங்கி பெரிய கோவில்களையும், மாடமாளிகைகளையும் கல்கொண்டு அமைத்திருக்கிறார்கள். மக்களின் தாயகமான 'தமிழனின் மூகண்டமானது,புகழ்வாய்ந்த நகரங்கள், கோவில்கள், மாடமாளிகைகள், அரங்கங்கள், அறிவியல்கள், கல்விவளம் ஆகியவற்றுடன் இன்று பழங் கனவாகிவிட்டது. கடல்வலயம் அதனை அமுக்கிவிழுங்கிக் கொண்டது. முதற்பெரு நாகரிகத்தினை ஒழிக்கும்வகையில் ஏற்பட்ட அழிவுகளுக்கெல்லாம் முதற்படி இதுவாகும்."

### இலெமுறியா

முத்தமிழை வளர்த்த தமிழ் நாடு முன்னொரு காலத்தில் 'இலெமுறியா' என்னும் பெரிய கண்டமாக இருந்ததாகவும், இக்கண்டம் தென் அமெரிக்கா தொடக்கம் ஆபிரிக்கா, இந்தியா முதலிய நாடுகளை உள்ளடக்கி அவுஸ்திரேலியாவரை பரந்திருந்ததாக ஆராய்ச்சி வல்லுநர்கள் கூறுகின்றார்கள்.

இப்பொழுது இந்தியாவிலுள்ள மேற்கு மலை இப்பொழுது கடலிருக்கும் இடம் வரை நீண்டிருந்ததென்றும், அம்மலையைக் குமரிமலை என்று வழங்கினர் என்றும், அம்மலையிலிருந்து குமரியாறு, பஃறுளி ஆறு என்னும் இரண்டு ஆறுகள் பாய்ந்து ஏழ்தெங்க நாடு, ஏழ்மதுரைநாடு, ஏழ்முன்பாலைநாடு, ஏழ்பின்பாலை நாடு, ஏழ்குன்றநாடு, ஏழ்குணகரைநாடு, ஏழ்குறும்பனைநாடு என்னும் நாற்பத்தொன்பது நாடுகளும் பிறவும் செழுமையுடன் இருந்ததாகப் புறநானூறு, சிலப்பதிகாரம் முதலிய நூல்கள் கூறுகின்றன. நாலுகடல் கோள்கள் நடந்து இந்தப் பெரும் நிலத்தை விழுங்கியது. கடைசியாக நடந்தகடல்கோள் இற்றைக்கு ஒன்பதினாயிரம் ஆண்டுகளுக்கு முன் நடந்ததெனஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.

சிலப்பதிகார காலத்தில் குமரியாறுபோய் குமரிக்கடல் தென்எல்லையாயிற்று என கீழ் வரும் பாடலின் மூலம் இளங்கோவடிகள் கூறுகிறார்.

"பஃறுளி யாற்றுடன்
பன்மலையடுக்கத்துக்
குமரிக் கோடும்
கொடுங்கடல் கொள்ள
வடதிசைக் கங்கையும்
இமையமும் கொண்டு
தென்திரை ஆண்ட
"தென்னவன் வாழி"
"தென்குமரி வடபெருங்கல்
குணகுடக் கடலாவெல்லை"
எனவும்

"குமரி யொடு
வடஇமை யத்து ஒரு
மொழிவைத்துல
காண்ட சேரலாதற்கு"

எனவும் (சிலப்பதிகாரம்) பிற்காலத்தில் தமிழ்நாட்டில் எல்லைகள் குறுகிக்குறுகி,

"வடவெங்கடம் தென்குமரி
ஆயிடைத் தமிழ்கூறும்
நல்லுலகத்து"
"வெங்கடம் குமரிதீம்புனல்
பௌவ மென்று
இன்நான் கெல்லை
தமிழது வழக்கே"
(தொல்காப்பியம்)

"குணகடல் குமரி
குடகம் வெங்கடம்
என நான் கெல்லையில்
இருந்தமிழ்
(நன்நூல்)

"நெடியோன் குன்றமும்
தொடியோல் பௌவமும்
தமிழ் வரம்பறுத்த
தண்புனல் நாடு"
(சிலப்பதிகாரம்)

நாகரிகத்துடன் ஆதியில் மாபெரும் கண்டமாக இருந்த தமிழ்நாடு கடல்கோள்களினால் குறுகிக்குறுகி குமரிமுனைதென் எல்லையாகவும், இமயம் வட எல்லையாகவும் கடல் கிழக்கு மேற்கு எல்லைகளாகவும் மாறியது. பின்னர் சில காலம் செல்ல வேங்கடமலை தமிழ் நாட்டின் வட எல்லையாயிற்று.

தமிழ்நாடு தன்னரசுபெற்றிருந்த போது கடல் சூழ்ந்த பல நாடுகளில் தமிழ்க்கொடி பறந்தது.

"சிங்களம், புட்பகம்
சாவகம் ஆகிய்
தீவு பலவினும்
சென் றேறி அங்கு
தங்கள் புலிக்கொடி
மீன்சொடியும்
நின்று சால்புறக்
கண்டவர் தாய்நாடு"

என்று புகழ்ந்து மகிழ்ந்தார் பாரதி.

ஆனால் இக்காலத்தில் தமிழ் அன்னையின் திருமுடியெனத் திகழ்வது வேங்கடமலையே. அம்மலையை மாலவன் குன்றம் திருப்பதி என்பர்.

"நீலத்திரைகடல்
ஓரத்திலே நின்று
நித்தம் தவம் செய்
குமரி எல்லை
வடமாலவன் குன்றம்
இவற்றிடையே
புகழ் மண்டிக்
கிடக்கும் தமிழ்நாடு"

என்று குறுகி நிற்கும் தமிழகத்தை வேதனையுடன் பாடினார் பாரதி.

### இன்று தமிழன்

இந்தியாவிலே இலங்கையிலே, மலேசியாவிலே, சிங்கப்பூரிலே, பிஜீத் தீவிலே, அந்தமான் நிக்கோபார் தீவுகளிலே, பர்மாவிலே, தென் ஆபிரிக்காவிலே இன்னும் உலகத்தின் பல பாகங்களிலும் 7 1/2 கோடி தமிழர்கள் ஒரு தன்னாதிக்கம் கொண்ட சுதந்திரமான நாடு இல்லாதவராக அடிமை நிலையில் வாழ்கிறார்கள். எந்த ஒரு மானமுள்ள தமிழனும் இதை நினைத்தால் வேதனையடையாமல் இருக்க முடியாது.

எங்களிலும் பார்க்க விஸ்தீரணத்தால், ஜனத்தொகையால் மிகமிகக் குறைந்த நாடுகளும், இனங்களும்,சுதந்திரத்துடனும், இறைமையுடனும், தங்களுக்கென தன்னாதிக்கம் கொண்ட நாடுகளை அமைத்துக்கொண்டு உலகின் பல பாகங்களிலும் வாழ்கிறார்கள்.

எட்டுச்சதுரமைல் கொண்ட தீவுக்குச் சுதந்திரம்.இத்தீவின் பெயர் "நவ்ரூ". இச்சிறிய தீவு பூமத்திய ரேகைக்குத் தெற்கே பசிபிக்மகாசமுத்திரத்திலுள்ளது. 1966ம்ஆண்டு ஜனத்தொகை 4500.

பிரான்ஸ், ஸ்பெயின் எல்லையில் "பிரனீஸ்" மலையிலுள்ள 'அண்டோரா'வின் நிலப் பரப்பு 180 சதுரமைல் ஜனத் தொகை சுமார் 8500.இதுவும் ஒரு சுதந்திரநாடு.

அல்ப்ஸ் மலையிலுள்ள 'லீஷ் டென்ஸ்டைன்' நாட்டின் ஜனத்தொகை சுமார் 25000.

இத்தாலியில் ரிமினி அருகேயுள்ள 'சான்மரினோ' நினைவுக் கெட்டிய காலத்திலிருந்து சுதந்திர நாடாகவுள்ளது. நிலப்பரப்பு 23 சதுரமைல். ஜனத்தொகை சுமார் 22 ஆயிரம். இப்படிப் பல சிறிய நாடுகள் சுதந்திர நாடுகளாக உலகிலிருக்கின்றன.

### இஸ்ரேல்

தங்களுக்கெனச் சொந்த நாடில்லாமல் உலகின் பல பாகங்களிலும் அலைந்துகொண்டிருந்த யூதர்கள் இஸ்ரேல் நாட்டை தங்களுடைய சொந்த நாடாக அமைத்தபின்னர்தான் தங்களுடைய திறமையை உலகிற்குக் காட்ட முடிந்தது.

அதேபோல விஞ்ஞானம், கலை, அரசியல் பொருளாதாரம், தொழில் நுட்பம் ஆகிய சகலதுறைகளிலும் திறமை மிக்கதமிழனும், என்று தனக்கென்று ஒரு சுதந்திர நாட்டை உருவாக்குகிறானோ அன்றுதான் அவனுக்கு விடிவு ஏற்படும்.

---

## ஈரானில் வாழ்க்கை

கலகலப்பு தீசன்

### அப்பிள் பழமும் பல்லுக்குறுதி

வழமைபோல் காலை பல் துலக்கிக்கொண்டு நின்றேன். 'கூப்றிஸ்' 'கூப்றிஸ்' எனக் கூறிக்கொண்டே வந்தான் எனது கம்பனியில் வேலைசெய்யும் வேலையாள். (அதாவது கூடாது! கூடாது!!) 'ஏன்' எனக் கேட்டேன். தினமும் பல் துலக்கினால் 50-60 வயதில் பல் விழுந்துவிடுமாம். எனவே (தங்களைப் போல்) என்னைப் பல் துலக்கவேண்டாம் என்றும் கூறினார். அத்துடன் இவர்கள் சாப்பாட்டுக்குப் பின் அப்பிள் பழம் சாப்பிடுவார்கள். அப்பிள் பழம் பல்லின் அழுக்கை அகற்றுமாம். 'ஆலும் வேலும் பல்லுக்குறுதி!' என்பது நம் நாட்டில் இங்கே 'அப்பிள் பழமும் பல்லுக் குறுதி.'

### சரி வந்தால் நீராடு

சனி நீராடு எனக் கூறினார் ஔவை. கூழானாலும் குளித்துக்குடி என்றும் கூறுவார்கள். இங்கு ஈரானின் தலைநகரை அடுத்துள்ள பகுதிகளில் வெளிநாட்டவர் வாடகை வீடு தேடி அலைவது ஒரு பக்கம். அதிலும் குளியலறை, குளிக்கும் வசதியுடன் வீடு கிடைப்பது மிக மிக அரிது. எனவே இங்கு வீடு சரிவந்தால்தான் நீராடலாம்.அப்படியானால் ஈரானிய மக்கள்?!

### முத்தத்திற்கு மொத்தம் மூன்று மாதம்

ஜூன் மாத நடுப்பகுதியில் ஈரானின் பிரசித்தி பெற்ற நகரொன்றில், வீதியில் சென்ற இளம் பெண்ணை ஓர் இளைஞன் திடீரென முத்தமிட்டுவிட்டான். முடிவு 3 மாதச் சிறை. பொலிசார் பிடித்த போது இளைஞன் சொன்னான்: பெண்ணின் பெனியனில் ('கிஸ்மி') 'என்னை முத்தமிடுங்கள்' என இருந்ததினாலேயே முத்தமிட்டேன் என்று. பொலிசார் நம்பவில்லை. பாவம் பையன் 3 மாதம் சிறைக் கம்பிகளை முத்தமிடப் போகிறான்.

### ஆண்களுக்குச் சீதனம்

அண்மையில் எமது திட்டத்தில் வேலைபார்க்கும் வேலையாள் ஒருவரின் திருமணம். திருமணத்திற்கு அழைப்பு வந்ததால் அந்தக் கிராமத்திற்குச் சென்றேன். சம்பாஷணைகளை ரசித்துக்கொண்டேயிருந்தேன். 28, 30 வயதாகியும் ஆண்கள் பலர் திருமணம் செய்யாமல் இருக்கின்றனர். ஏனெனக்கேட்டேன். பெண்களுக்குக் கொடுப்பதற்குப் பணமில்லையாம். எனக்கு இதைக் கேட்டதும் அதிர்ச்சியாக இருந்தது. 50.000 றியால் தொடக்கம் 10,000 றியால்.(10,000/- - 20,000/- ரூபா.) மற்றும் தளபாடங்களும் கொடுக்கவேண்டுமாம். பட்டினங்களில் இதைவிடக் கூடுதலாகக் கொடுக்கவேண்டும். பாவம் ஆண்கள் இங்கே கண்ணீர் வடிக்கிறார்கள். இலங்கை இளைஞர்கள் கனவில் கூட ஈரானில் திருமணத்தை நினைக்கமாட்டார்கள். காரணம், சீதனம் கிடையாதே!

# இயந்திர இயக்குநராக ஓர் இலங்கை டாக்டர்

**இலங்கைப் பல் டாக்டர் லண்டனில் பிளாஸ்டிக் தொழிற்சாலையில் இயந்திர இயக்குநராக வேலை பார்க்கிறார். கை நிறையச் சம்பாதித்துக்கொண்டு தாயகம் திரும்பவேண்டும்; இங்கு ஏழைகளுக்குப் பணிபுரியவேண்டும் என்பது அவர் இலட்சியம். டாக்டர் கே. திருநடராஜா அளித்துள்ள சுவையான பேட்டி இது.**

பரபரப்பான லண்டன் மாநகருக்கு அணித்தாகவுள்ளது நியூமோல்டன் என்ற நகரம். அங்கு ஒரு பிரசித்தி பெற்ற பிளாஸ்டிக் தொழிற்சாலை. அதனுள் காலடிஎடுத்து வைக்கின்றேன். எத்தனை எத்தனையோ பாரிய இயந்திரங்கள். காதைத்துளைக்கும் அவற்றின்ஒலி கூடவேஉடலைத் தகித்துவிடக்கூடிய வெக்கை.

அங்கே ஓடி ஓடி 'ஆட்டோமட்டிக்' இயந்திரங்களைக் கவனிக்கின்றார் ஒருவர். வயது நாற்பதிருக்கும். குள்ளமுமில்லை, உயரமுமில்லை. தலையை வழுக்கை மெல்ல மெல்ல ஆக்கிரமிக்கின்றது. முகத்தில் அனுபவத்தின் செறிவு நன்கு தெரிகின்றது. தூரத்தில் நின்றே அவரை அவதானிக்கின்றேன். யாருடனே ஏதோ கதைத்துக் கொண்டு நிற்கின்றார். சம்பாஷணையின் சுவாரஸ்யத்தில் தோளை அடிக்கடி உலுப்புகின்றார்.

அவரை ஒரு டாக்டர் என்று என்னிடம் அறிமுகப்படுத்தி வைக்கின்றார்கள். இலங்கையில் பல்வைத்தியத்துறையில் பலவருட அனுபவம் பெற்றதாகக் கூறுகின்றார். முல்லைத்தீவு, மட்டக்களப்பு, சாவகச்சேரி, யாழ்ப்பாணம், கொழும்பு ஆகிய பகுதிகளில் கடமையாற்றி யுள்ளதாகவும் தெரிவிக்கின்றார். வல்வெட்டித்துறைதான் தனது பிறப்பிடமாம். அமுதா, மதி, மேனகா என்ற மூன்றுபெண் குழந்தைகள் தனக்கிருப்பதாகக் கூறுகின்றார் டாக்டர் கே. திருநடராஜா.

அவரைப்பேட்டி காண்பதற்கு முன்பாக அவரைப் பற்றி மற்றவர்கள் சொல்லி வைத்தது எனது மனத்திரையில் விரைவாக ஓடிமறைகின்றது!

''வெட்டும் பற்களா, வேட்டைப் பற்களா, கடைவாய்ப் பற்களா...... சூத்தையாகிவிட்டாலோ வேறு என்னமாதிரியான வலியோ, அன்புக்குப் பாத்திரமான அந்த டாக்டரிடம் போங்கள். பேச்சுவாக்கிலேயே உங்களுக்கு நிவாரணம் அளிப்பதில் சமர்த்தர். பரவலாக பல மக்களிடம் நம்பிக்கையைப்பெற்று அதன் மூலம் பிரபலம் அடைந்தவர்'' அந்த டாக்டர் என்கின்றார் ஒருவர்.

''பண்பிலே சிகரம். தனது கருத்தைத்தான் திணிப்பார். ஆனால் என்றுமே ஆத்திரப்பட்டது கிடையாது. கதைப்பவர்கள் தமது போக்குக்கு-தமது கருத்துக்கு எதிர்மாறானவராக இருந்தாலும் கூட... அவர்களது போக்கிலேயே கதையை வளரவிட்டு தமது கருத்துக்களை மெல்ல மெல்லமாகத் திணித்துத் தமது பக்கமே அவர்களை நாடவைப்பதில் அந்த டாக்டர் மகா கெட்டிக்காரரர்'' என்கின்றார் இன்னுமொருத்தர்.

இங்குஅவர் பகுதிநேரமாகத்தான் வேலைசெய்கின்றார். பின்னேரங்களில் சுமார் நான்கு ஐந்து மணித்தியாலங்கள்தான் அவருக்கு வேலை. ஆனால் இலங்கையில்கூட பல்டாக்டர்மார் 'பாட்டைம்' வேலை தானே செய்கின்றார்கள். மத்தியானத்துக்குப் பின்பு அவர்களைக் காணவே முடியாதே. இதுபற்றி அவரிடம் கேட்டேன்.

## டாக்டர்களின் கடமை

''இலங்கையில் நான் பணி புரிந்தபொழுது காலையில் சுமார் மூன்று நான்கு மணித்தியாலங்கள் மட்டுமே நோயாளர்களைப் பார்வையிடுவேன். உண்மையில் அரசாங்க பல் வைத்தியர்கள் அனைவருமே காலையிலும் மத்தியானச் சாப்பாட்டுக்குப் பின்னரும் நோயாளர்களைப் பார்வையிடவும் பரிசீலிக்கவும் கடமைப்பட்டுள்ளார்கள். எனக்கும் இது விருப்பமாக இருந்தது. ஆனால் பல டி. எம். ஓக்கள் இப் பழக்கத்தை நடைமுறைப் படுத்த விரும்புவதில்லை. நாமும் கிளினிக்குகளை பின்னேரங்களில் திறந்துவைத்திராமல் கையெழுத்தேட்டில் மாத்திரம் திறந்ததாகக் குறித்துவைப்போம். நோயாளர்கள் மத்தியிலும், பல் வைத்தியர் என்றால் மரியத்துக்கு முன்பாகத்தான் செல்ல வேண்டும் என்ற மனோபாவம் வளர்ந்துவிட்டது. குறுகிய நேரத்தில் அதிகமான நோயாளர்களைப் பார்வையிடுவது சாத்தியமில்லை. எனவே முக்கியமான - தீவிர நோயுடையவர்களை மட்டுமே கவனத்துடன் பார்க்க முடிந்தது. என்னிடம் வருபவர்களிடம் அவர்களுக்கு என்னவிதமான நோய் ஏற்பட்டிருக்கின்றது என்பதை முதலில் விளக்குவேன். அதனால் எதிர்காலத்தில் மீண்டும் தவறுகள் நேராத வகையில் ஜாக்கிரதையாக இருப்பார்கள். பின்பு நான் செய்யப்போகும் பருத்துவத்தைப்பற்றி விபரிப்பேன். இதனால் அவர்கள் கற்பனைசெய்து வந்திருந்த பயம் ஓடிமறைவதுடன் எமக்கும் ஒத்தாசையளிப்பார்கள். குறிப்பாகச் சொன்னால் கிராமத்து மக்கள் பாமரமக்கள், வலியின் வேதனையால் எவ்வளவோ அவதிப் படுவார்கள். ஆனால் அதை அகற்றுவதற்குச் சம்மதிக்க மாட்டார்கள். ஊசிபோடுவதென்றால் அவர்களுக்கு ஓர் அலர்ஜி! இவர்களுக்கு வேறு எவருக்கேனும் செய்யும் ஒப்பரேஷனைக் காண்பிப்பேன். சாதாரணமாக அந்த நோயாளி அலட்டிக் கொள்வதைப் பார்த்து இவர்கள் வாயைப் பிளப்பார்கள். இவர்களது பயமும் பறந்து விடும். பழுதான பல்லும் பறந்துவிடும்.

## பல்லை உடைத்ததுண்டோ?

பல் டாக்டரான நீங்கள் யாருக்கென்றாலும் பல்லை உடைத்ததுண்டோ? சிரித்துக் கொண்டே கேட்ட என்னிடம் அவரும் சிரித்துக் கொண்டே சொல்கின்றார்.

நான் சண்டைக்காரனல்ல. எனவே அச்சந்தர்ப்பம் எனக்கு ஏற்படவில்லை. பலமான தாக்குதலால் பற்கள் சேதமுறுவது உண்மையே. ஆனால் தாக்கப்பட்டவர் சேதமுற்ற பல்லைக் கவனிக்காமல்விடும் பொழுது ஆபத்து மேலும் மேலும் கூடவே செய்கின்றது. எம்மைப் பொறுத்தவரை முன் வாய்ப்பற்களை அகற்றுவது சுகமான வேலைதான். ஏனெனில் அவை ஆழமாக வேரூன்றாதவை. ஆனால் கடவாய்ப் பற்கள் ஆழமாக வேரூன்றியவை. அவற்றை அப்புறப் படுத்துவது கொஞ்சம் சிரமமாகும். ஆனால் அவற்றை அகற்றும்பொழுதுகூட நோயாளிக்கு எவ்வித இடைஞ்சலும் தோன்றாமல் செய்வதில்தான் டாக்டரின் பலமும் தேவைப் படுகின்றது. திறமையும் மெருகடைகின்றது.

## பாவம் பெண் டாக்டர்கள்

உங்களது கதையைப்பார்த்தால், பல் டாக்டர்களாகப் பணிபுரியும் பெண்களைப்பற்றி அனுதாபம் ஏற்படுகின்றதே என்றதற்கு......ஆமாம்! பல் வைத்தியம் என்பது ஆண்களுக்குத்தான் உகந்தது. பெண்களால் முடியாதென்றில்லை. ஆனால் பல்லைப்பிடுங்குவதற்குக்கூட ஒருவிதபலம் இருந்தேயாக வேண்டும் என்பது மறுக்க முடியாதஉண்மைஎன்கின்றார்.

## சந்திப்பு: எஸ். ஜெகதீசன்

பல்லை அகற்றிய பின்பு மீண்டும் அதை அடைக்காமல் விட்டுவிடுகின்றார்களே...?

பல்லை அகற்றியதும் தமது வலி எல்லாம் மறந்துபோய் நிவாரணம் பெற்றுவிட்டதாகவே பலர் நினைக்கின்றார்கள். அதனால் காலியான அந்த இடத்தைப் பற்றி அக்கறை எடுப்பதில்லை. ஆனால் தம்மை அறியாமலேயே தமக்கு இன்னல்களை ஏற்படுத்துகிறார்கள் என்பதை அவர்கள் உணர்வதில்லை. அகற்றப்பட்ட பற்களின் இருமருங்கிலுமுள்ள பற்கள் காலக்கிரமத்தில் அந்த வெற்றிடத்தை நோக்கி வளைகின்றன. கீழ்வாய்ப் பற்களை அகற்றியிருந்தால், அந்த வெற்றிடத்தை நோக்கி மேல் வாய்ப் பற்கள் கீழிறங்கிவிடுகின்றன. அதனால் பல்லின் சீர் வரிசை கெட்டுவிடும். முகமும் மாறுதல் அடைந்து விடும். குழந்தைகளுக்குப் பாற்பற்கள் இயற்கையாகவே விழுவதுதான் நல்லது. ஏனெனில் அவர்களது பற்களை அகற்றி அதை வெற்றிடமாக்கும் பொழுது, புதிதாக முளைக்கும் பற்கள் 'தெத்தி' யாவதற்கு இடமேற்பட்டு விடும்.

பாதிப்படைந்த பற்களைக் கூடுமானவரை பழுது நீக்கி அடைப்பதுதான் சிறந்த முறை. மிகவும் மோசமான பற்களைத்தான் அகற்றவேண்டும். முன்வாய்ப் பற்களின் அரைக்கும் பகுதிகளை அடைப்பது கொஞ்சம் சிரமம். ஏனெனில் அடைக்கப்பட்ட அப்பகுதிகள் மீண்டும் உணவுடன் அரைபடும் பொழுது அகன்றுவிட வழியுண்டு. அதனால் அவற்றை அடக்கும் பொழுது சிறிது குடைந்து இலகுவில் கழரமுடியாதவகையில் அடைக்கவேண்டியிருக்கும். பொதுவாகப் பற்களை அடைப்பதற்கு ஐந்து வழிகளை டாக்டர்கள் கையாளுவார்கள். இவை சற்று மருத்துவ ரீதியாக இருப்பதால் வாசகர்களுக்குப் புரிய வைப்பது கஷ்டம்.

## பற்கள் சுத்தமாக இருந்தால்...

பல்லைச் சுத்தமாக வைத்திருந்தால் எவருக்குமே பல் வியாதி இலகுவில் தோன்றாது. ஒவ்வொரு உணவிற்கும் பின்பு பற்களைச் சுத்திகரிக்கும் படி பல பல் வைத்தியர்கள் வற்புறுத்தியும் நடைமுறையில் இப்பழக்கத்தைக் கையாளுபவர்கள் மிகவும் ஆனால் நித்திரைக்கு முன்பு கண்டிப்பாகப் பற்களைச் சுத்திகரித்தேயாக வேண்டும். பிரஷ்போன்றவைதான் சாலச் சிறந்தவை. இதனால் பற்களின் இடுக்குகளில் உணவுத் துணிக்கைகள் தங்கி காபோவைதரேட்டுக்களில் பக்றீரியா வளர்வது தடைப்படுகின்றது.

'ஆட்டோமட்டிக்' இயந்திரம் நின்றுவிட்டதாகயாரோ கூறவே, ஒருகணம் அங்கு சென்றுஅதைப்பழுது பார்த்து மீண்டும் இயக்கிவிட்டு என்னிடம் வருகிறார்.மே தானையும் உலுப்புகின்றார்.

## இலங்கை டாக்டர்கள்

நீங்கள் இங்கு டாக்டராகப் பணிபுரியாமல் இயந்திரங்களுடன் சங்கமிக்கின்றீர்களே...!

இங்கு டாக்டராகப் பணி புரிய முடியாதோ என்று மனதில் தோன்றுகின்றது. ஆனால் எப்படிக் கேட்பது என்த்தடுமாறுகையில் எனது சந்தேகத்தைப் புரிந்துகொண்டோ என்னவோ அவரே பதில் சொல்கின்றார்.

--எமது டாக்டர்களுக்கு இங்கு பணி புரிய அங்கீகாரம் கிடைப்பதில்லை. அதற்கு எமது பல்கலைக் கழகங்கள் வழங்கும் தராதரப்பத்திரங்கள் தகுதிகுறைந்தனவாகப் படுவதுதான் மூலகாரணம். இங்கு பணிபுரிய வேண்டுமாயின் மேலும் ஓர் அடிப்படைத்தேர்வில் சித்தியடைய வேண்டும். பின்னர் கூட தேசிய வைத்திய சபையில் பதிவுசெய்தாக வேண்டும். அதற்குப் பின்புதான் தான் எமது வேலை இங்கு ஊர்ஜிதமாகும். தவிரதனியார்துறையில் செயலபட வேண்டுமானாலும்கூட மேற்படி இருமுறைகளையும் நாம் கையாளவேண்டும். கூடவே சமார் 5000 பவுண்கள் காசும் தேவைப்படும். அப்படியென்றால்தான் தகுர்த வைத்தியச் காமான்களை வாங்கித்தனிப் பட்டமுறையில் செயல்பட அனுமதி வழங்குவார்கள். இவை எல்லாமே இலங்கையிலிருந்து வந்த டாக்டர்களுக்கு சுயமாக நிர்ணயம் பெறுவதில் ஏற்படும் சிரமங்களாகும்.

பலர் இப்பொழுது லண்டனுக்கு வருகின்றார்களே? அதுவும் அங்கு தாம்பார்த்துவந்த வேலையையும் ராஜினாமாச் செய்துவிட்டு. அவர்களுக்கெல்லாம் 'என்ன நடக்குமோ?

--அடுக்கான எனது கேள்விகளுக்குச் சுருக்கமாகவே அவர் சொல்கின்றார். அவர்கள் எல்லோருமே லண்டனை ஒரு தளமாக வைத்து வேறு நாடுகளுக்குப் போகவே முயல்கின்றார்கள்.

[6-ம் பக்கம் பார்க்க]

## திரைகடல்

இலங்கையின் முதலாவது தமிழ் 'சினிமாஸ்கோப்' படமான 'தெய்வம் தந்த வீட்டை 'உலகின் முதலாவது தமிழ் கறுப்பு-வெள்ளை சினிமாஸ்கோப் படம்' என்ற விளம்பரத்தோடு வெளியிட்டிருக்கிறார்கள். மெச்சத்தக்க முயற்சிதான். திரைப்படத் துறையில் அசுரர்களான தமிழகத்தாரே இதுகாலரை தமிழில் ஒரேயொரு சினிமாஸ்கோப் திரைப்படந்தான் தயாரித்திருக்கிறார்கள். 'தவழும் குழந்தை'யான இலங்கையில் இரண்டு படங்கள் தயாராகி விட்டன. இதில் ஒரு வேடிக்கையென்னவென்றால் முதலில் தயாரான படம் இன்னும் வெளியாகவில்லை. பின்னர் தயாரிக்கப்பட்ட 'தெய்வம் தந்த வீடு' முதலாவது 'சினிமாஸ்கோப்' படம் என்ற விளம்பரத்துடன் ஓடிக்கொண்டிருக்கிறது. இது ஒரு அசுர முயற்சி, அபரித முயற்சி என்ற வகையில் இதன் தயாரிப்பாளர் வி. கே. ரி. பொன்னுசாமி பாராட்டப்படவேண்டியவரே; மூன்றுவகைகளில் அவரைப் போற்றலாம்.

(அ) முதலாவது தமிழ் சினிமாஸ் கோப் (கறுப்பு-வெள்ளைத் தயாரிப்பாளர் அல்லது இலங்கையில் முதலாவது சினிமாஸ் கோப் தமிழ்ப் படத்தைத் தயாரித்தவர் என்ற வகையிலும் (ஆ) 'மெஜஸ்டிக்' படமாளிகையில் தமிழ்ப்படமொன்றை ஓடச் செய்தவர் என்றவகையிலும் (இ) செல்லமகாலில் சினிமாஸ் கோப் படமொன்றை ஓடச் செய்தவர் என்றவகையிலும் அவர் பெருமைக்குரியவரே! (இதற்காக 'செல்லமகால்' திரையரங்கே மாற்றியமைக்கப்பட்டிருக்கிறது.)

சாதாரண ஈழத்துத் தமிழ்ப் படங்களே போட்ட முதலை விழுங்கித் தோல்வியைத் தழுவிக்கொண்டிருக்கும் போது சினிமாஸ் கோப்புக்காக எவர் தான் முதலிடு செய்யப் போகிறார்கள். ஆனால் திரு. பொன்னுசாமி செய்திருக்கிறார் சினிமாஸ் கோப் என்றதும் 'கமராமேன்' ஞாபகம் வருவது இயற்கையே! இரண்டு படங்களும் (நெஞ்சுக்குத் தெரியும், தெய்வம் தந்த வீடு) இரண்டு பெரும் கமரா நிபுணர்களிடம் ஒப்படைக்கப் பட்டிருந்தன. ஒருவர் லெனின் மொறாயஸ் மற்றவர் எம். ஏ. கபூர். இதில் கபூர் முந்திக்கொண்டார்.

படத்தைப்பார்ப்பவர்கள் 'கமரா... சுழன்று விளையாடவில்லையே! எனக் குறைபடுகிறார்கள். 'பிராக்டிகலாக, உள்ள சில விஷயங்கள் சாதாரண ரசிகனுக்கு விளங்குவதில்லை. தெய்வந் தந்த வீட்டில் கமரா புகுந்து விளையாடாததற்குக் காரணம்எமது நாட்டில் சினிமாஸ்கோப் 'லென்சு'களுக்கு உள்ள தட்டுப்பாடே! இங்கே உள்ள ஒரே ஒரு லென்ஸையும் வாடகைக்கு அமர்த்தித்தான் படத்தைப் பிடித்திருக்கிறார்கள். எனவேதான் 35 எம். எம். படங்களைப் போல் கம்ராமேனால் 'விளையாட' முடியவில்லை. ஆனால் படம் துடைத்துவிட்டது போல் 'பளிச்'சென்று இருக்கிறது.

எப்படியோ ஒரு 'சினிமாஸ் கோப்' படம் தயாராகிவிட்டது. குழந்தை ஓட ஆரம்பித்துவிட்டது. எனவே பல குறைகள் தென்படலாம்! அவைகளைக் களைவதற்கான ஆலோசனைகள் வழங்கவேண்டியது எமது கடன்,

:திரையன்

# ஜயந்தி

சமுத்திர வெளியில் மனக் குதிரை மேய்வதற்குக் கட்ட விழ்த்துவிட்டதனுல் சிந்தனைக்கு இரைகிடைப்பது போலக்கண்ணெதிரே நெய்தல் குருகுகளும் நீர்ப்பறவைகளும் இரைதேடப் படபடவென்று சிறகடித்து கடல்மேல் பறப்பதும் குன்றுகளுக்கு மீண்டு ஓய் வெடுப்பதுமாயிருக்கின்றன. கடல் காற்று இதமாக வீசக் கடல்வெளியில் மேய்ந்து சலித்துப்போன கண்களை உறக்கம் மெல்லெனத் தழுவும், இமைக்கதவங்கள் தாமாக மூடுகின்றன...

''கருடா சௌக்கியமா''- சமுத்திர நீர்ப் பரப்புமேல் நெடுந்தூரம் பறந்துபோய் வந்த களைப்புடனே இறக்கைகளைச் சுருக்கிக்கொண்டு என் முன்னுல் ஒரு கற்பாறை மீதமர்ந்த கருடப்பட்சியிடம் வினவுகிறேன்.

''அவரவர் இருக்குமிடத்தில் இருந்தால் சௌக்கியத்துக்கு என்ன குறைச்சல்? விண்ணில் மிக உசக்கத்தாவி கிழக்கே வெகுதூரம் பறந்துபோய் வருகிறேன்''-கருடன் சொல்லியது.

''அப்படியா, நீ பறந்த உயரத்தில் அக்கரை, ஊர்களெல்லாம் உன்பட்சிப்பார்வைக்குத் தோற்றினவா? கோடிக்கரை, தொண்டி, பூண்டி...அங்கெல்லாம் கடற்கரைக் குடியிருப்பில் கோழிக்குஞ்சு ஓடிற்ரு, உன் கண்ணில் சிக்கியதா?''

''இங்கிருந்து ஐநூறு கல் கிழக்கே சமுத்திரம் பயங்கரமாகக் கொந்தளிக்கத் தொடங்கியிருக்கிறது. கடலோரக்குடி மக்கள் பொருள்பண்டம் உடைமைகள் வீடுவாசல் அங்கங்கு போட்டது போட்டபடி எல்லாம் அப்படி அப்படியே கிடக்கவிட்டு உயிர்தப்பினுல் போதும் என்று ஓடிப்போகிருர்கள். கோழிக்குஞ்சுகள் தாயின் இறக்கைக்குள் ஓடிப் பதுங்குவது போலப் பூமித் தாயிடம் புகல்தேடி அவர்கள் ஓடிப்போய்க்கொண்டிருக்கிருர்கள். சமுத்திர அலைகள் மகா பயங்கரமாகக் கொந்தளித்து எழுந்து பயமுறுத்தி அவர்களைப் பின்னுல் துரத்துகின்றன. பொன்கொழித்தபூமியாய் திகழ்ந்த பல ஊர்களை சமுத்திரப் பிரவாகம்முழுதாக அப்படியே விழுங்கி உள்ளடக்கிவிடும் கடல்கோள் பேரழிவுதோற்றப்படுகிறது எங்கும் ஒரே அவலக்குரல். திருப்பதி சுவாமி தான் காப்பாத்தணும்!''

''என்ன என்ன ஜலப்பிரளயமா கருடா? வங்கக் கடலிலா?''

''ஆம்! ஜலப்பிரளயம்தான் மகனே?''- கருடன்மீது திருமால் ஆரோகணித்து திருவாய் மலர்கிருர்.

அ. செ. மு.

அவர் செம்பவளச் செவ்வாயில் மேலும் அரிதாக உதிர்ந்த மணிவாக்குகளை ஒரு கோடி நல்முத்துகளாகப் பொறுக்குகிறேன். ''காத்தல் கடவுள் கைத்தர்ம சக்கரத்தின் ஆணை அது மகனே! மானிடனின் ஆணவ மாயைத்திரை கிழிக்கும் பிரளய சங்கநாதம்! உண்மை ஒளியின் ஒரு பொறியினை உலகமாந்தர் அங்கு காண்பார்கள்!'' ''பிரபு! பிரபு! மானிடப்பூச்சிகள்! கலக மானிடப் பூச்சிகளார்க்க் கடவிய நீ காவாதிருந்தக்கால் ஆர்க்குப் பரமாம் சுவாமி!''-உளறிக்குழறிக் கண் விழித்தபோது கிருஷ்ணன் கோவிலிலே டண்டணுர் என மணி ஓசை முழங்கிக்கொண்டிருப்பது கேட்கிறது' சிறிது வேளைதான் கண்ணயர்ந்தேன். ஆனுலும் ஆழ்ந்த உறக்கம். கடல்காற்று மேனியை இனிதாக மருவி கவரி வீசியதால் உடல் அசதியாகவும் நீங்கி ஒரு புத்துணர்ச்சி உண்டாகியிருந்தது. எழுந்து உட்கார்ந்திருந்து மற்ெருரு கல்மீது சாய்ந்து அலைகடல ஆழி நீர்ப் பரப்பில் நோக்கெறிந்து மீண்டும் சிந்தனையில் ஆழ்கிறது மனம்.

''பூமி தோற்றியது முதலாக இந்நாள்வரை எத்தனை கடல்கோள் சம்பவித்துவிட்டன. இதோ கண்முன் தோற்றும் இக்குறுங்கடலூடாக முன் எப்பவோ ஒரு காலத்தில் நிலப்பரப்பு இரு கரையோரங்களையும் இணைத்து இருந்ததாம். பாரத யுத்தத்தில் ஸ்ரீகிருஷ்ணன் அரசாண்ட துவாரகாபுரியையும் கூடத் தான் யுகமுடிவிலே கடல் பொங்கி அழித்ததாகச்சொல்வர். யுகப் பிரளயம், ஜலப் பிரளயம், பூமி பிளந்து பிரியும் பூமிபிரளயம்-இதிலே நாம் எதனை எதிர்நிற்க முடிந்தது. எதற்குத் தப்பி ஒதுங்கமுடிந்தது இக்கால பரியந்தம்? கண் முன்னே நம் காலடியில் சமுத்திரம் - பரந்த சமுத்திரம்- அதிலே ஒரு வாய் ஒரு மிடறு தானும் பருகி நம் தாகம் தணிக்க முடிகிறதா? அவ்வளவும் ஏன் உவர் நீராக இருக்கிறது, நன் நீராக ஏன் இல்லை, இருக்கக்கூடாது? சிந்தித்தோமா? எப்பொழுதாவது? ஒரு நிமிடம், ஒரு நொடிப் பொழுது அவ்வழியே ஏதும் செயல்படத்தான் துணிந்தோமா? அது சாத்தியமா முடியுமா அல்லது முடிந்ததா- யுக யுகாந்திரமாக?

நீரளவே ஆகும் நீராம்பல்!-

''என்ன சாமி ஏகாந்தமாக இப்படி இங்கே வந்து உட்கார்ந்துவிட்டீர்கள்? இந்நேர மட்டில் உங்களை யாரும் காணவில்லையா? எழுந்திருங்கள்! பசியாற்றிக்கொண்டு அதுக்கப்புறமாய் வந்து இருக்கலாம்!?'-தற்செயலாக அந்தப் பக்கம் எட்டிப்பார்த்த ஓர் அடியார் எழுப்பிய குரல் என் சிந்தனையைத் திருப்புகிறது. என் தனிமை கண்ணுற்ற அவர் என்னை அண்மித்து தப்பிப்போய் விடாதபடி காத்து நின்று அடியார் திருவமுது அவைக்குத் தம்கூடவே என்னை அழைத்துச்சென்ருர். அங்கு என்னை அமர்வித்து தாமும் எம்பக்கமே இருக்கை ஏற்று இறையருள் தியானித்தோமாய் பசிவெம்மை ஆற்றினம்.

(தொடரும்)

# 6 ஆண்டுகளின் பின் 'அமிர்' வெளிநாடு செல்கிருர்

எதிர்க் கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் வெளிநாடு செல்லவிருக்கிருர்.

ஜமேய்காவில் செப்டம்பர் மாதம் நடைபெறவுள்ள பொதுநல நாடுகளின் பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் திரு. அமிர்தலிங்கமும் கலந்து கொள்கிருர்.

வர்த்தக அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி தலைமையிலான இலங்கைத் தூதுக்குழுவில் திரு. அமிர்தலிங்கத்துடன் மொறட்டுவ உறுப்பினர் திரு. ரெஜின் பெர்னுண்டோ, மினுவாங்கொட உறுப்பினர் திரு. பெனற் குணசேகரா ஆகியோரும் கலந்துகொள்கின்றனர்.

1972-ம் ஆண்டு காலஞ்சென்ற தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்துடன் தமிழ்நாடு சென்று வந்த பின்னர் அமிர் மேற்கொள்ளவுள்ள முதல் வெளிநாட்டுப்பயணம் இதுவாகும்.

இதற்கு முன்னதாக, கடந்த அரசின் ஆட்சிக்காலத்தின் போது ஒருதடவை சிங்கப்பூருக்குக் கிளம்பிய சமயம் அரசாங்கம் அவருக்கு அனுமதி மறுத்தது.

விமானப் பயணச்சீட்டையும் பெற்றிருந்த அவர் தடுத்து நிறுத்தப்பட்டார்.

அப்போது பாராளுமன்ற உறுப்பினராகவன்றி, தமிழர் விடுதலைக் கூட்டணியின் இணைச்செயல் அதிபராக விருந்த அவருக்கு அனுமதி மறுக்கப்பட்டது தொடர்பாக அப்போது உடுவில் தொகுதி உறுப்பினராகவிருந்த திரு. வி. தர்மலிங்கம் பேரவையிலும் பிரச்னை கிளப்பினுர்.

ஆனுலும், அனுமதி வழங்கப்படவில்லை.

இப்போது எதிர்க்கட்சித் தலைவராக திரு. அமிர்தலிங்கம் வெளிநாடு செல்கிருர்.

பல நாடுகளிலும் வாழும் தமிழர்கள் திரு. அமிர்தலிங்கத்திற்கு அழைப்பு விடுத்திருப்பதாகத் தெரிகிறது.

இந்த அழைப்புக்களை ஏற்று ஜமெய்க்கா சென்று திரும்புகையில் அமிர் வேறு பல நாடுகளுக்கும் சென்று திரும்புவார் என்று தெரிகின்றது.

பல நாடுகளுக்கும் செல்லவுள்ள அவர், அந்நாடுகளின் தலைவர்களையும் சந்திப்பாரென்றும் தெரிகிறது.

அதற்கான ஏற்பாடுகளை இங்குள்ள அந்நாடுகளின் தூதர்களுடன் மேற்கொள்ளவிருக்கிருர்.

திரு. அமிர்தலிங்கம் திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா பிரதமராகவிருந்தபோது 1957-ல் லண்டனில் நடைபெற்ற சர்வதேச பாராளுமன்ற சபை மாநாட்டிலும், பின்னர் டட்லியின் தேசிய அரசாங்கம் பதவியிலிருந்த போது 1967-ல் அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற சர்வதேச பாராளுமன்ற சபை மாநாட்டிலும் இலங்கைக்குழுவின் பிரதிநிதிகளில் ஒருவராகக் கலந்துகொண்டவர்.

ஜமேய்க்கா செல்லும் இந்தக் குழுவைவிட மேலும் மூன்று பாராளுமன்றக் குழுக்கள் வெளிநாடு செல்லவுள்ளன.

'மாலி'

## வங்கிக் கொள்ளையரின் கைகள் துண்டிப்பு

வங்கியில் கொள்ளையடித்த இருவரின் கைகளைத் துண்டித்துவிடும்படி ராணுவ நீதிமன்றம் ஒன்று தீர்ப்பு அளித்துள்ளது.

பாகிஸ்தான் ராணுவ நீதிமன்றம் அளித்த இத்தீர்ப்புக்கு ராணுவ ஆட்சித்தலைவரும் சம்மதம் வழங்கியுள்ளார்.

# இயந்திர இயக்குநராக...,

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

--அப்படியெனின் இங்கிலாந்து தவிர்ந்த ஏனைய நாடுகள் இலங்கையின் தராதரப் பத்திரங்களை அங்கீகரிக்கின்றனவோ எனநான் தொடர்கின்றேன்.

அதுதான் இல்லை! இங்கிலாந்துடன் கூடவே ஜெர்மனி, பிரான்சு, அமெரிக்கா, கனடா போன்ற சிலநாடுகள் எம்மைப் புறக்கணிக்கவே செய்கின்றன. ஆனுல் வளர்ந்து வரும் ஆபிரிக்க நாடுகளும், மத்திய கிழக்கும் எமது திறமைகளுக்கு மதிப்பளித்து எமக்குக்கௌரவம் கிடைக்கும்படி செயல்படுகின்ருர்கள். இலங்கையில் ஒருவருடத்தில் உழைக்க முடிவதை அந்நிய நாடுகளில் இரண்டொருமாதத்திலேயே சேமிக்க முடிகின்றதே!

உங்களது பதிலைப் பார்க்கும் பொழுது பணநெருக்கடி இலங்கையின் டாக்டர்மாரைக்கூட விட்டுவைப்பதில்லையோ... ஆச்சரியத்துடன் அகலக்கண்ணை விரித்த என்னைப் புரிந்தவராக அவர் தொடர்கின்ருர்.

## அறிவு விரிகிறது

வளமானவாழ்வு, சுலபமானவேலை, சமுதாயத்தில் உயர்ந்த அந்தஸ்து, இனிய குடும்பம் இவையெல்லாமே படித்துப்பட்டம் பெற்ற அனைத்து டாக்டர்மாருக்கும் சொந்தமானவையே. என்னைப் பொறுத்தவரையில் அன்பான மனைவி, அன்பான பிள்ளைகள்மூவர், பங்களா மாதிரியான ஒரு வீடு, கார்... வேறு என்ன வசதி எல்லாம் வாழ்வை வளம்படுத்துமோ, அனைத்துமே இருக்கத்தான் செய்தன. ஆனுல் வெளிநாட்டுக்குச் செல்லும்பொழுது முதலாவதாக எமது அறிவு பரந்து விரிகின்றது. எமது அனுபவம் பெருகேறுகின்றது. இவற்றுடன் எமக்கும், எம்மவர்களின் வளமான எதிர்காலத்துக்கும் வழிகோலமுடிகின்றது. சிறிது காலம் வெளியிடங்களில் பணிபுரிந்ததாலேயே முன்பு எமது வாழ்நாள் முழுவதும் நிம்மதியாக ஒருதனியார்துறை மூலம் மக்களுக்குச் சேவை செய்ய முடியும். இன்னும் சிலவருடங்களில் தாயகம் திரும்பியதும் வசதியாளர்களிடம் பணத்திற்காகவும், ஏழைகளுக்கு இலவசமாகவும் சிறந்தபணியாற்றுவதென்பதுதான் எனது குறிக்கோள்; எனது இளமைக்காலக்கனவு!

## மனங்கொண்டது மாளிகை

நீங்கள் இங்கு வைத்தியத் துறையில் பணிபுரியாமல் மெஷின்களுடன் போராடுகின்றீர்களே, கஷ்டமாக இல்லையோ?

முன்பு நான் கேட்க நினைத்ததை இப்ப வாய்விட்டுக் கேட்டேவிட்டேன்.

இலங்கையில் குனிந்து ஒரு கிடுகு எடுத்துக் கொடுத்திருக்க மாட்டேன். ஆனுல் மனம் கொண்டதுதான் மாளிகை என்று பெரியோர்கள் சொல்லுவார்களே. அதனுல் இந்த வேலை எனக்குப் பாரதூரமாகவில்லை. மேலும் சிறிது காலத்துக்குத்தானே என்று ஒரு நிம்மதி!!

உங்களது வாழ்வில் ஒரு நாள் எவ்வாறு கழிகின்றது?

இக்கேள்வியை அவரிடம் கேட்பதற்கு அடிமனதில் ஒரு காரணமும் இருக்கவே செய்தது! என்னைப்பொறுத்தவரையில் படிப்பு-வேலை- சமையல்- சாப்பாடு- நித்திரை- நாட்கள் வளமாக அள்ளப்பட்டு வருகின்றன, அவரைப் பொறுத்தவரையில், அவரே சொல்கின்ருர்.

--பொதுவாக அதிகாலையிலேயே எழுந்துவிடுவதுதான் எனக்குப் பிடிக்கும். காலைக் கடன்களை முடித்தபின்பு கடவுளுடன் ஒரு ஐந்து நிமிடங்கள் சங்கமமாவேன். ஆரம்பகாலத்திலிருந்தே கிறீஸ்தவ கல்லூரிகளில் படித்ததினுல் எனக்குத் தேவாரமோ திருவாசகமோ அவ்வளவாகத் தெரியாது. தெரிந்த சிலவற்றைத் தியானிப்பேன். பின்பு இரண்டு மணித்தியாலங்கள் கட்டாயம் பல் சம்பந்தமாக ஏதாவது படிப்பேன். இலங்கையில் என்ருல் காலைச் சாப்பாட்டின்பின்னர் வைத்திய நிலையத்துக்குப்போவேன். மதியச் சாப்பாட்டின் பின்பு நித்திரை கொள்வேன். மாலையில் அந்தியயங்கும்பொழுது எனக்கு நன்கு பிடிக்கும். செவ்வானமும், மாலை வீடு திரும்பும் உழவர்களும், கூடு நோக்கி [illegible] குருவிகளும [illegible]. சுமார் இரண்டு மைல் தூரமென்ருலும் நடப்பதில் எனக்கு அலாதிப்பிரியம். இரவினிலே படம் ஏதாவது இருந்தால் அங்குபோவேன். அல்லது வீடுதிரும்பி பிள்ளைகளுடனும் ரேடியோவுடனும் பொழுதைப் போக்குவேன். தினமும் இருதடவை குளிப்பதில் எனக்குத்தீராத ஆசை!

--ஆனுல் இங்கு வாழும் முறையே வேறு? காலை எட்டு மணிக்குத்தான் பொழுதுவிடிகின்றது. அதுவும் வீட்டுக்காரன் 'சென்ரல் ஹீட்டரை'ப் போடாமல் விட்டால் இழுத்து மூடிக் கொண்டு படுக்கத்தான் தோன்றும், ஸமர்ஸீஸன் பிரமாதமாக அமையும் போலுள்ளதே என்றுகூறி என்னைப்பார்க்கின்ருர்.

எனது அனுபவங்களைக் கொட்டிமுழக்குகின்றேன் நான்!

## மற்றவர்களுக்கு முன்மாதிரி

நீங்கள் புகைபிடிப்பதில்லையோ என்றவாறே 'ரொத்மன்ஸ்' சிகரெட் பைக்கெட்டை நீட்டுகின்ருர் நண்பரொருவர்.

--வாழ்க்கையில் டாக்டர்கள் மற்றவர்களுக்கு முன்மாதிரியாக இருக்கவேண்டும். அந்த டாக்டரே குடிக்கிருர்; நாம் குடித்தால் என்ன, உயிரா போய்விடப்போகின்றது என்ற மனப்பான்மை மக்களிடம் ஏற்படாமல் தடுக்க வேண்டும் என்ருல் நாம் தான் கவனமாக இருக்கவேண்டும். எனவே நான் குடிப்பதுமில்லை, புகைபிடிப்பதுமில்லை. தவிர பற்களில் காவி பிடித்து அதன் வெண்மையும் காலக்கிரமத்தில் அகன்று விடுமில்லையா?

--மற்றவர்கள் என்ருல் கான்ஸர் வந்து விடும் என்பார்கள். பல் டாக்டராச்சே...! அதனுல்தான் காவியைப் பற்றிப் பிரஸ்தாபிக்கின்ருர் என்று நினைத்து சிகரெட் நண்பரின்பக்கம் திரும்புகின்றேன். அவர் மெல்ல இருமுகின்ருர். டாக்டர் முறுவலிக்கின்ருர். கூடவே தோளையும் உலுப்புகின்ருர்.

## உங்களது எதிர்காலத் திட்டங்கள்...?

முன்பு அகில இந்தியாவையும் சுற்றிப் பார்த்ததில் உலகம் சுற்றும் ஆசை பிறந்தது. விரைவில் யூ, கே. முழுவதையும் வலம்வர இருக்கின்றேன். பின்பு உலகின் எந்தெந்தப் பகுதிகளுக்கு நான் பணிபுரியச் சென்ருலும் அந்தந்தப் பிராந்தியங்களை எல்லாம் முற்று முழுதாக ஆக்கிரமிப்பேன். இதுதான் எனது அபிலாசை! விரைவில் ஆபிரிக்க நாடொன்றில் நியமனம் கிடைக்குமென எதிர் பார்க்கின்றேன்.

சதைத்துக்கொண்டிருந்தவரை-இடையில் புகுந்த 'காப்பிரி' போர்மன் அழைத்துச் செல்கின்ருர்.

தோளை உலுப்பித் தனது ரேட்மார்க்கை உறுதிப்படுத்திக்கொண்டே அவரும் செல்கின்ருர்.

கஷ்டமான மெஷின்களும் அவருக்கில்லை; சங்கடமான மெஷின்களும் அவருக்கில்லை.

'ஆட்டோ'வின் அரவணைப்பில் அவர் ஒரு பாக்கிய சாலி!

அன்பின் அரவணைப்பில் அவரது நோயாளிகள் பாக்கியசாலிகள்?!

## கேரதீவு - சங்குப்பிட்டி வழியாக

## தலைமன்னாருக்கு ஒரு பயணக்கதை

# கல்லுப் போடுவதில் எங்கள் ஆட்கள் கெட்டிக்காரர்!

சங்குப்பிட்டித் துறையில் படகு நிற்பதற்கு முன்னரே சிலர் அதிலிருந்து பாய்ந்து ஓடத்தொடங்கியதைப் பார்த்ததும் வாழ்க்கையிலேயே ஓட்டப்போட்டியெதிலும் பரிசுபெறாததுமட்டுமல்ல பங்கு பற்றியுமிராத நானும் படகிலிருந்து இறங்கி அவர்களைப் பின்தொடர்ந்து ஓடினேன்.

எனக்கு முன்னால் ஓடிச் சென்றவர்களில் இரண்டொருவர் ஓட்டத்தை நிறுத்திக் கொண்டார்கள். அவர்களில் ஒருவர் ஓடிக்கொண்டிருந்த என்னைப் பார்த்து 'ஏன் ஓடுகிறீர்கள். பஸ் இன்னும் வரவில்லையே!' என்றார்.

ஓட்டத்தை நிறுத்திக் கொண்டேன். பஸ்தரிப்புநிலையத்துக்கு நடந்துபோய்ச் சேர்ந்தேன். நல்ல வெய்யில். பிரயாணிகள் தங்குவதற்கு வசதியாக யாரோ புண்ணியவான்கள் நல்ல முறையில் சிமெந்தினால் ஒரு கூடம் கட்டி வைத்திருக்கிறார்கள். அவர்கள் வாழ்க பல்லாண்டு!

பஸ்தரிப்பு நிலையத்திற்குச் சென்றபோது எங்களுக்கு முன்னர் வந்த படகில் பயணம் செய்தவர்கள் அங்கு பஸ்ஸுக்காகக் காத்துநின்றனர்.

நாங்களும் அவர்களுடன் சேர்ந்துகொண்டோம்.

பஸ்தரிப்பு நிலையத்தையொட்டி ஒரு சிறிய தட்டிக் கடை. சர்பத், சோடா, சிகரட் இனிப்பு, பிஸ்கட் முதலியவகையராக்கள் அங்கு விற்பனைக்குண்டு. தேநீரும் வெற்றிலையும்கூட இருந்தது.

முன்னர் அந்தக் கடை இருந்ததில்லையாம். திருக்கேதீச்சரத் திருவிழாக் காலத்தில் தற்காலிகமாகத் தோன்றிய அந்தப் பெட்டிக்கடை இப்போது நிரந்தரமாகி அன்பர் பணிபுரிகிறது.

அதாவது பஸ் மூலம் தண்ணீர் இறக்குமதிசெய்து 'சர்பத்' விற்றாலும் பச்சைத் தண்ணீர் கேட்பவர்களுக்கும் இல்லையெனாது இருக்கும் வரை கொடுக்கிறார், அந்தக் கடைக்காரர்.

பஸ்தரிப்பிலிருந்தவர்களில் நானுட்பட வேறு சிலர் வெளியே வீதியில் நின்று பஸ் வருவதற்கான அறிகுறிகள் தென்படுகிறதா என்று அடிக்கடி பார்த்துப் பார்த்துக் கண்ணும் பூத்துவிட்டது.

ஆனால் பஸ்ஸைக் காணாத கன்றுகள் போல் நாங்கள் நின்றோம்!

பஸ் வருவதற்கு எவ்வளவு தாமதமாகிறதோ அவ்வளவுக்குப் பெட்டிக் கடைக்காரருக்கு வியாபாரம்! அதுவுமில்லையென்றால் அவர் எதற்காக அந்த வனாந்திரத்தில் கடை திறந்திருக்கவேண்டும்!

பஸ் தரிப்பில் நின்றவர்களில் பலரும் பல விஷயங்களைப் பற்றியும் பேசிக் கொண்டனர்.

நானும் பேச்சுத்துணைக்கு யாரும் கிடைக்கமாட்டார்களா என்று நோட்டம் விட்டபோது, யாழ்ப்பாணத்தில் கிராம சேவையாளராகக் கடமையாற்றிய திரு. அலோசியஸ் வேறு சிலருடன் அரட்டையடித்துக்கொண்டிருப்பது தெரிந்தது. அவரும் என்னைப்பார்த்துவிட்டார்.

''என்ன மன்னாருக்கோ?'' என்று நான் ஆரம்பித்தேன்.

''மன்னாரிலும்ஓர் அலுவல். தலைமன்னாரில் இன்றைசகு இந்தியாவிலிருந்து ஒரு நண்பர் வருகிறார்...''என்று திரு. அலோசியஸ் கூறியதும் அவர் என்னைக் கேட்பதற்குமுன்பே ''நானும் மன்னாரில் நண்பர் கலைவாதி கலீலைச் சந்தித்துக் கொண்டு தலைமன்னாரில் இன்று வந்திறங்கும் எனது உறவினர் ஒருவரை அழைத்துவரச் செல்லவேண்டும்'' என்று சொல்லி முடித்தேன்.

இந்தப் பூர்வாங்கபடலத்திற்குப் பின் படகுக்கும் பஸ்ஸுக்கும் தவமியற்றும் பரிதாப நிலைபற்றி எங்கள்சம்பாஷணை திசைதிரும்பியது.

இந்தச் சம்பாஷணையின் போது அங்கு நின்ற வேறு சிலரும் எங்களுடன் வந்து கலந்துகொண்டனர்.

''இந்தக் கடல் அவ்வளவு ஆழமில்லை; இதிலே படகு போய் வாறதுக்காக ஒரு பகுதியை ஆழமாக்கியிருக்கினம். இதுக்குப் பதிலாக றோட்டுப் போடலாம் அல்லது பாலம் போடலாமே.''

''இதுக்குப் பாலம் போட வேண்டுமென்றுதான் பண்டிதர் கிளிநொச்சி எம். பியாக இருந்த காலத்தில் பார்லிமெண்டில் அடிக்கடி மகா தேவாப்பாலம் மகாதேவாப் பாலம் என்று உச்சரித்துக்கொண்டிருந்தார். பத்திரிகைகளிலும் பண்டிதரின் மகாதேவாப்பாலம் பற்றிய செய்திகள் அடிக்கடி வந்து கொண்டிருந்தன.''

''பண்டிதர் தான்கிளிநொச்சியை விட்டுத் தீவுத்தொகுதிக்குப்போய்விட்டாரே.''

''இனி ஏதாவதொரு தீவுக்குப் பாலம வேணுடுமென்று குரல் கொடுத்தாலும் கொடுப்பார்.''

''இதுவரையில் பேரவையில் பிரேரணை கொண்டுவருவதற்கு முன்னறிவித்தல் கொடுத்திருந்தாலும் கொடுத்திருப்பார்.

'ஏன் நீங்கள் பண்டிதர் தான் பாலம் போடவேண்டுமென்று கவலைப்படுகிறீர்கள்?'

இப்படி எங்களுக்குள் சம்பாஷணை நடைபெற்றுக் கொண்டிருக்கையில் கிராம சேவகர் அலோசியஸ் ஒரு யோசனையை உதிர்த்தார்

''யாழ்ப்பாணத்திலிருந்து பூநகரி, முழங்காவில், மன்னாருக்குச் செலபவர்களும் இந்த இடங்களிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் செல்பவர்களும் தாங்கள் கொண்டுசெல்லும் பொதிகளுடன் ஆளுக்கொரு கல்லும் கொண்டு வந்து போட்டால் ஒரு சில வருடங்களிலேயே இந்தக் கடலில் புதியவீதி உருவாகிவிடும்''

திரு. அலோசியஸ். தெரிவித்த யோசனை இது.

இதைக் கேட்டுக்கொண்டிருந்த மற்றொரு நண்பர்.

''நல்லாச்சொன்னீங்கள் எங்கடை ஆட்கள் யாருக்கும் கல்லுப்போடத் தயாராயிருப்பினமேயொழிய கல்லைச் சுமந்துவந்து கடலுக்கை போடுவினம் என்று நீங்கள் நினைக்கிறியளோ''என்றார்.

எங்கள் சம்பாஷணை சிறிது நேரம் ஸ்தம்பித்தது.

[அடுத்தவாரம்[

---

# பக்தி என்றால் என்ன?

## விளக்கம் தருகிறார் பித்துக்குளி முருகதாஸ்

பேட்டி: வி. ரவிச்சந்திரன்

பக்திப் பாடல்களைப்பாடி ஆத்திக உள்ளங்களைக் கொள்ளை கொண்ட பித்துக்குளி முருகதாஸையும் அவரது புது மனைவியையும் அண்மையில் சந்தித்தேன். 'ஈழநாடு' பத்திரிகையின் நிருபர் என்றதுமே எனக்குத் தெரியுமே என்றார். நான் ஆச்சரியமடைந்து என்னை உங்களுக்கு எப்படித் தெரியும் என்று கேட்டேன். உங்களை எனக்குத் தெரியாது. 'ஈழநாடு' பத்திரிகையைத் தெரியும். இலங்கைக்கு வந்தபோது ஒரு முறை ஈழநாடு பத்திரிகைக்குப் பேட்டியளித்த கவனம் உள்ளது என்றார். பத்திரிகையைப் பற்றி நான் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் சளைக்காமல் மெதுவாகப் பதிலளித்தார் முருகதாஸ். பேட்டி முடிந்ததும் நான் கேட்டகேள்விகள் தவறாக இருந்தால் என்னை மன்னிக்கவேண்டும். இப்படிக் கேள்விகள் கேட்டதால் என்னை நாத்திகன் என்று முடிவுசெய்துவிடாதீர்கள். நானும் ஒரு முருக பக்தன்தான் என்றேன். நீங்கள் என்ன கேட்டீர்கள் என்றநினைவேயில்லையே. அதையெல்லாம் அப்போதே மறந்து விட்டேனே என்று கூறிச் சிரித்த அவர் அன்போடு என் முதுகில் தட்டிக்கொடுத்தார். அவருடைய பெருந்தன்மையான இந்தப் பதிலைக் கேட்டு மன நெகிழ்ச்சியுடன் விடைபெற்றேன் நான்.

கேள்வி: உங்களுடைய இயற்பெயர் என்ன?

பதில்: இயற்பெயர் பால சுப்பிரமணியம்.

கே: இப்போதிருக்கும் பெயர் எப்படி வந்தது?

ப: எனது குருநாதர்களில் ஒருவரான பிரம்மானந்த பரதேசியார் என்னை அடிக்கடி பித்துக்குளி - பித்துக்குளி என்று கூப்பிடுவார். எதிர் காலத்தில் சூழ்நிலை சந்தர்ப்பம் காரணமாக பித்துக்குளி முருகதாஸ் என்ற பெயர் ஏற்பட்டுவிட்டது.

கே: உங்களுடைய பூர்வீகம் எந்த ஊர்?

ப; பிறந்து வளர்ந்தது கோவையில். இருப்பது சென்னையில்.

கே: இந்த பக்தித்துறைக்கு எப்படி வந்தீர்கள்?

ப: எங்கள் குடும்பமே பக்திமயமான குடும்பம்தான். எனவே இயற்கையாகவே சிறு வயதிலிருந்தே கடவுள் மீது நாட்டம் ஏற்பட்டுள்ளது.

கே: பாடல்களைப் பாடுவதற்கு யாரிடம் இசை பயின்றீர்கள்?

ப: யாரிடமும் பயின்றது கிடையாது. எனக்கு பழனியாண்டவர்தான் குருநாதர்.

கே: பாடல்களையும் எழுதுகிறீர்கள். அதற்கான தமிழ் ஞானமும் ஆண்டவன் கொடுத்ததுதானா?

ப: ஆம். அதுவும் ஆண்டவன் கொடுத்ததுதான். இலக்கணம் கற்று எழுதக் கூடிய பாடல்கள் சரியாக இருக்கும் என்று கூறமுடியாது. சரியாக இருக்காது என்றும் கூறமுடியாது.

கே: உங்கள் பதில் விளங்கவில்லையே. இலக்கணம் பயின்ற பிறகு பாடல் எழுதினால் சரியாக இருக்காது என்கிறீர்களே. உங்கள் வாதம் சரியானதுதானா?

ப: நான் சொன்னதை நீங்கள் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை. இலக்கணம் இருக்கக் கூடிய பாடல்களில் உள்ளம் இருக்கவேண்டும். உள்ளம் இருக்கக்கூடிய பாடல்களில் இலக்கணம் இருக்கவேண்டும். ஆனால் ஆண்டவனாக அளித்த பாடல்களில் உள்ளமும் இருக்கும்; இலக்கணமும் இருக்கும். கற்றுக்கொண்டு எழுதும் பாடல்களில் உள்ளம் இருப்பது ஆச்சரியம்.

கே: இதுவரை எவ்வளவு பாடல்கள் எழுதியிருக்கிறீர்கள்?

ப: சரியாகக் கணக்குத் தெரியாது. புத்தகமாகப் போட்டது அறுநூறு அல்லது எழுநூறு பாடல்கள் இருக்கும். அச்சாகாதது நூற்றுக் கணக்கில் இருக்கும்.

கே: பக்தியைப் பற்றிச் சில சந்தேகங்கள் கேட்கலாமா?

ப: தாராளமாகக் கேளுங்கள்.

கே: இந்த நூற்றாண்டில் மனிதன் ஓய்வெடுக்கக்கூட நேரமில்லாமல் ஓடிக்கொண்டிருக்கிறான். சூழ்நிலைகளின் கட்டுப்பாடுகளில் சிக்கித் தவிக்கும் இன்றைய மனிதனுக்குப் பக்தி அவசியம்தானா?

ப: பக்தி என்ற சொல்லினுடைய அர்த்தம் தெரிந்தால் நீங்கள் இப்படிக் கேட்கமாட்டீர்கள். உலகில் ஒவ்வொரு மனிதனும் பக்தியோடுதான் இருக்கின்றான். எந்தத்துறையில் ஒருவன் ஈடுபட்டாலும் அதில் அவனது ஆசைகள் ஈடேறவேண்டும் என்று சிரத்தையோடு செய்கின்ற முயற்சிக்குப் பெயர்தான் பக்தி. எந்தெந்தத் தொழில் செய்பவர்களுக்கும் இது பொருந்தும். யாதேனும் தொழில் செய்வோம்; யாதும் அவன் தொழிலே என்கிறார் பாரதியார். மகாசக்தி இல்லையேல் எந்தத்தொழிலும் நடைபெறாது. எந்தத்தொழில் செய்தாலும் அதில் பக்தி இல்லாவிட்டால் அவனால் ஈடேற முடியாது. ஒரு காரியம் ஈடேறுவதற்கு இரவும் பகலும் மனதைச் செலுத்தி முயற்

(9-ம் பக்கம் பார்க்க)

---

# உங்கள் கேள்விகளும் ஆவிகளின் பதில்களும்

அன்புள்ள வாசகர்களே!

இந்தக் கேள்வி-பதில் பகுதிக்கு வரும் கடிதங்கள் எத்தனை எத்தனை? வாசகர்கள் தான் எத்தனை குணத்தவர்கள், அப்பப்பா! ஒவ்வொரு கடிதமும் ஒரு சரித்திரத்தைக் கூறுகின்றன. சில கடிதங்கள் நம் கண்களில் நீரை வர வழைக்கின்றன, குறிப்பாக பெண்கள் இக்கேள்வி - பதில் பகுதிக்குக் காட்டும் ஆர்வம் தான் என்னை வியப்படையவைக்கிறது. என்னை அவ்வப்போது உற்சாகப்படுத்தி என் ஆர்வத்தைத்தூண்டுவதும் இவர்கள்தான். ஒரு பெண் வாசகருக்கு நான் சீக்கிரம் இறந்துவிடுவேனோ என்று பயம் வந்துவிட்டதாம். அதற்காக ஆண்டவனைவேண்டி எனக்கு நீண்டகடிதம் எழுதியுள்ளார். அதில்சிறு பகுதி:

அன்பு ரவிமாமா வாழ்க வாழ்க. எம்மை வென்ற ரவி மாமா வாழ்க, வாழ்க. பேனா வீரர் ரவிமாமா வாழ்க. இன்ப ரவி மாமா வாழ்க வாழ்க- அழகு ரவி மாமா வாழ்க வாழ்க-நல்ல ரவி மாமா வாழ்க வாழ்க - நிறைய எழுதியே வாழ்க வாழ்க- பெயரோடும் புகழோடும் வாழ்க வாழ்க-நாம் மகிழ நீண்ட ஆயுள்பெற்றே வாழ்க வாழ்க! என மனமார எல்லாம் வல்ல இறைவனைப்பிரார்த்தித்து இதயத்தின் அடித்தளத்திலிருந்து இந்தச் செல்வி...... வாழ்த்துகின்றாள்.

இன்னொரு சகோதரி எழுதுகிறார். ''உங்கள் ஆக்கபூர்வமான கருத்துக்களைக்கொண்ட கட்டுரைகளுக்கு எங்கள் ஆதரவு எப்போதும் உண்டு. எனவே எழுதும் கரங்களுக்கு ஓய்வு வேண்டாம். எழுதிக் கொண்டே இருங்கள்.''

நீங்கள் பல்வேறு கோணங்களில் இருந்து பல பல அம்சங்களை எழுதிக் குவிக்கக்குவிக்க நான் படிபடியென்று படித்தேன். படிக்கின்றேன். உங்கள் எழுத்துக்கள் என்னை மிகவும் கவர்ந்துள்ளன. என்றேனும் ஒருநாள் பரிசுப்பொருள்களுடன் வந்து தமிழ்நாட்டில் உங்களைச் சந்திப்பேன்; இது நிச்சயம் என்று எழுதும் மற்றொரு சகோதரி. இவர்கள் யார்? எவரென்று நான் அம்பலப்படுத்த விரும்பவில்லை. என்னை நம்பி கடிதம் எழுதியவர்களுக்கு நான் துரோகம் செய்யலாமா? இந்தச் சகோதரிகள் அனைவருக்கும் நான் ஈழநாடுமூலமாகக்கூறுவது இது தான்: உங்கள் அனைவரது அன்பும் என்னை நெகிழவைக்கிறது. உங்கள் விருப்பத்திற்கிணங்க முருகன் அருளால் தொடர்ந்து எழுத முயலுவேன். வணக்கம்.

ப. சுவாம்பிள்ளை,
புதுமடம் R. C. T.M.
மானிப்பாய்.

எனக்கு ஆறு பிள்ளைகள் உண்டு. எப்போதும் துன்பமான சீவியமாயிருக்கின்றது. இப்பிள்ளைகளினால் எனக்கு ஏதாவது சுகம் உண்டா?

பிள்ளைகள் பெரியவர்களாகும்வரைதான் இத்துன்பம். அதன்பிறகு உமது கவலை தீரும்.

(9-ம் பக்கம் பார்க்க)

# ரியூஷன் அவசியம்தானு?

## தானுக சிந்திக்கும் திறமை குன்றும்

பாடத்தில் குறைவாகவுள்ளவர்களுக்கே ரியூசன் மிகவும் அவசியம். ஆனுல் இந்தக் காலத்தில் எந்தவொரு மாணவனைக் கேட்டாலும் ரியூசனுக்குச் செல்வதாகத்தான் பதில்வரும். ரியூசனுக்குச் சென்ருல்தான் நாம் பரீட்சையில் சித்தியடைய முடியும் என்ற நம்பிக்கை பலருக்கு மனதில் வேரூன்றிவிட்டது.

பாடசாலையில் ஆசிரியர் கற்பிப்பதை அதிக மாணவர் கவனிப்பதில்லை. ஏன் ரியூசன் இருக்கிறதல்லவா? பாடசாலை வகுப்பில் ஆசிரியர் சொல்லித் தருவதிலும் பார்க்க, ரியூசன் வகுப்பில் இன்னும் அதிகமாக விளக்கமாகச் சொல்லித் தந்துவிடுவார்கள் என்ற நம்பிக்கை அதிகமான மாணவருக்கு உண்டு. ஆனுல் ரியூசன் வகுப்பில் நடப்பதே வேறு. உதாரணமாகக் கூறப்போனுல் ஒரு ரியூசன் வகுப்பில், பாடசாலை வகுப்பிலும் பார்க்க அதிகமான மாணவ, மாணவிகள் இருக்கிருர்கள். இத்தனை மாணவருக்கும் எப்படித்தான் விளக்கமாகச் சொல்லிக் கொடுப்பார்களோ தெரியவில்லை?

இப்போது மாணவர்கள் பாடசாலையிலும், ரியூசனிலும் நாள் முழுவதும் சொல்லிக் கொடுப்பதை எழுதி வைத்துப் பாடத்தை கிரகிக்கிருர்களே ஒழிய தானுகச் சிந்தித்துச் செயலாற்றும் தன்மை அறவே ஒழிந்து போக இடமுண்டாகிறது. பரீட்சையில் தாம் கிரகித்ததை எழுதுவார்களே தவிர அறிவைப் பயன்படுத்தி, சிந்தித்து எழுதமாட்டார்கள். இந்தத் தன்மை பிற்காலத்தில் இவர்களுக்குத் தீமையை விளைவிக்கும். எனவே ரியூசன் ''0 வீதமானவர்களைப் பாதிக்கிறது.

மீனுகுமாரி இராமநாதன்
உடுவில் மகளிர் கல்லூரி.

## ஏழை மாணவரின் கல்வியைக் குழப்புகிருர்கள்

மாணவர்கள் ரியூசனுக்குச் செல்வதன் காரணமாக பாடசாலையில் நன்கு கல்வி போதிக்கும் ஆசிரியர்களுக்கு உற்சாகம் பெருமளவு குறைகின்றது. மாணவர்களும் பாடசாலையைப் பொழுதுபோக்கும் இடமாக நினைக்கின்றனர். இதனுல் அவர்களது ஒழுக்கம் பேணப்படுவதில்லை.

இதுமட்டுமல்ல ரியூசன் என்று கூறிப் பெருமளவு பணத்தையும் மாணவர்கள் கையாடுவதற்குச் சந்தர்ப்பம் ஏற்படுகிறது. பலர் இவ்வாறு கிடைக்கும் பணத்தை தீயவழியில் செலவிடுகின்றனர்.

இவைமட்டுமல்ல பெருமளவு மாணவர்கள் ரியூசனுக்குச் சென்றுவிட்டுவந்து ரியூசனுக்கு செல்லமுடியாத எத்தனையோ கெட்டிக்கார ஏழை மாணவர்களை பாடசாலையில்சீராகக் கல்விகற்கமுடியாமல் குழப்புகின்ருர்கள். இதனுல் இவர்களது ஒரு தலைமுறையே பாதிப்படைகின்றது.

ரியூசனில் படிப்போம் என்றும், பாடசாலையில் படிப்போம் என்றும் கூறி இரண்டு தோணியில் கால்வைத்தவன் போல் கடைசியில் படிப்பும் பாழாகிவிடும் நிலையும் ஏற்படுகின்றது. எனவே இந்த ரியூசன் மோகத்தை ஒழித்து பள்ளிப்படிப்பை சீராக்க முயற்சி எடுப்போம் ஆயின் அது உயர்ந்த ஒரு பணியாக அமையும்.

எஸ். சிவகுமாரன்
உரும்பராய் இந்துக்கல்லூரி.

## ரியூசன் இல்லாக் கல்வி பாழ்

ரியூசன் இல்லாமல் பரீட்சையில் சித்தியடையமுடியாத நிலைமை இன்று ஏற்பட்டுள்ளது. நடைபெறுகின்ற பரீட்சைகளின் பெறுபேறுகளை நாம் உற்றுநோக்கின் இந்த உண்மை நன்கு புலப்படும். இன்று ரியூசன் இல்லாமல் பரீட்சையில் சித்தி எய்தியவர்கள் விரல்விட்டு எண்ணக் கூடியவரேயாவர்.

இன்றைய கல்வித்திட்டத்தின்படி ஒரு வகுப்பிலே நாற்பதுக்குக் குறையாத மாணவர்கள் இருக்கிருர்கள். ஆனுல் ஆசிரியர் ஒருவரால் இருபத்தைந்து மாணவர்களுக்கு மேல் கல்வி கற்பிப்பது கடினமாகும். இத்தொகை மாணவரிடமும் சிரத்தை எடுத்துப் படிப்பிப்பதற்கு நாற்பத்தைந்து நிமிடங்களும் போதாது. அது ரியூசன் ஆசிரியர்களால்தான் முடியும். பாடசாலையில் நாற்பத்தைந்து நிமிட நேரம் ஒரு பாடம் படிப்பதிலும் பார்க்க ரியூசன் வகுப்பிலே ஒன்றரை மணித்தியாலங்கள் கற்பித்தால் பாடங்கள் நன்ருக விளங்கும். எனவே பாடசாலை ஆசிரியரைத்தவிர ரியூசன் ஆசிரியரால்தான் எம்மை வளர்க்க முடியும். எனவேதான் ரியூசன் இல்லாக் கல்வி பாழ்.

சில மாணவர்களுக்கு அடுத்தடுத்து ஏதாவது சுகமில்லாமல் வந்துவிட்டால் அவர்கள் பாடசாலைக்குச் செல்லா நாட்களில் கற்பிக்கப்படும் பாடங்கள் மீண்டும் கற்பிக்கப்படுவதில்லை. ரியூசன் வகுப்பில் நிலைமை அப்படியல்ல. நாம் ரியூசனுக்குச் செல்லா நாட்களில் அங்கு படிப்பித்த பாடங்களை மீண்டும் ஒருமுறை கேட்டுப் படித்துக் கொள்ளலாம்.

என். கே. துரைசிங்கம்
யாழ். மத்திய கல்லூரி.

## அறிவு வளராது அலுப்புத்தான் வளரும்

ரியூஷன் முறையால் மாணவன் காலை ஆறு மணிக்குத் தொடங்கி இரவு ஒன்பது மணிவரை ஓய்வின்றி இயங்க வேண்டும்.

இந்த நிலையில் ஒரு மாணவனுக்கு அறிவு வளராது; அலுப்புத்தான் வளரும். 15 மணி நேரம் இயங்கினுல் யாருக்குத்தான் அலுப்பு வராது.

சில ஆசிரியர்களை எடுத்துக்கொண்டால் அவர்கள் காலை, மாலை ரியூஷன் வகுப்பு வைப்பார்கள். இடையில் பாடசாலையில் ஓய்வெடுப்பார்கள். இதனுல் மாணவர்கட்கு உடலாலும், பணத்தாலும், நேரத்தாலும் பாதிப்பு ஏற்படுகிறது. ஆசிரியர்களும் பெற்ருேரும் ஒத்துழைத்து ரியூசனை ஒழித்து மாணவர்களின் அறிவைப் பெருக்கி அலுப்பைக் குறைக்கவேண்டும்.

ரியூசனுல் ஏற்படும் அறிவு வளர்ச்சி மாணவர்கள் செலவாக்கும் நேரத்தோடும் பணத்தோடும் ஒப்பிடும் போது மிக மிகக் குறைவு. ஏனெனில் ரியூஷனிலும் பாடசாலை போல் 40 - 50 மாணவர்கள் வரை ஒருவகுப்பில் படிக்கிருர்கள். பாடசாலைக்கும், ரியூஷனுக்கும் வித்தியாசம் இல்லை என்றே சொல்லலாம். எனவே பாடசாலை போதும், ரியூஷன் தேவையில்லை.

-யோ. பாலேஸ்வரன்
சாவகச்சேரி இந்துக்கல்லூரி

# மாணவர் எண்ணம்

'பிரபு'

## விஞ்ஞானமும் விவசாயமும் பிரிக்கமுடியாதன

விஞ்ஞானமும் விவசாயமும் இல்லாமல் மனித சமுதாயம் வளம்பெறமுடியாது. காடுகளில் வசித்து காய்கனிகளை உணவாகக்கொண்ட மனிதன் இப்போது விண்வெளியைக் கடந்து அதற்கப்பாலும் சென்றுவிட்டான். மனித சமுதாயத்தைப் பொறுத்தமட்டில் எதையெடுத்து ஆராய்ந்தாலும் முன்னிற்பது விஞ்ஞானமே. ஆனுல் ஒன்று, விஞ்ஞானம் விவசாயத்துக்குச் செய்த உதவியைப்போல் வேறு எந்தத் துறைகளுக்கும் செய்யவில்லை.

கொடிய வெய்பிலில் நெற்றி வியர்வை சிந்த அயராது நிலத்தை கலப்பையினுல் உழுது, நீர் இறைத்து இன்னும் வேறுபல தொழில்களையும் செய்த விவசாயிகளுக்கு இப்போது உழுவதற்கு உழவு இயந்திரமும், நீர் இறைப்பதற்கு இயந்திரமும் கண்டுபிடித்துக்கொடுத்ததும் விஞ்ஞானமே. அக்காலத்தில் இயற்கைப் பசளையிட்டு பயிர்செய்த கமக்காரர்களுக்கு இப்போது பலவகையான உரங்களையும், பூச்சிகளை அழிப்பதற்கு கிருமிநாசினியையும் ஆராய்ந்து அளித்துள்ளது.

வானம் மழையைப்பொழியாவிட்டால் வயல்கள் எல்லாம் எரிந்து நாசமாகிவிடும். இதனுல் உழவர்களுக்குமட்டுமல்ல நாட்டிற்குப்பெரிய நஷ்டம் ஏற்பட்டு நாம் பிறநாடுகளை எதிர்பார்க்கவேண்டி ஏற்படும். இதற்காக விஞ்ஞானிகள் தேவையான போது செயற்கை மழைபொழியவும் ஏற்பாடுகள் செய்துள்ளனர். இங்கு விளையும் நெல்லின் மூலமே நாட்டின் பொருளாதாரப் பிரச்னையை தீர்க்கமுடியும். நமது விவசாயச்செலவையும் ஓரளவு குறைக்கலாம். இவையெல்லாம் விஞ்ஞானத்தின் உதவியினுலேயே வந்ததாகும். இவ்வாறு விஞ்ஞானமும் விவசாயமும் ஒன்ருேடொன்று பிரிக்கமுடியாத நிலையில் உள்ளன.

எனவே விஞ்ஞானம் இதைப்போல் விவசாயத்துறைக்கு மேலும் பலஉதவிகளைஅளித்து நமது நாட்டை முன்னேற்றியும் மற்றவர்களிடம் கைநீட்டாமலும் மனித சமுதாயத்தை வளம்பெறச்செய்யுமென நம்புகின்ருேம்.

செல்வி ந. ஹம்ஸானந்தி
கொக்குவில் இந்துக்கல்லூரி.

### மாணவ மணிகளே...!

மாணவர் எண்ணத்தில் உங்கள் எண்ணமும் பிரசுரமாகவில்லை என்று கவலைவேண்டாம்! உங்கள் படைப்புகளைத் தொடர்ந்து எழுதுங்கள். தகுதிகண்டு பிரசுரிக்கப்படும்.

### மாணவச் சிரிப்பு!

ஆசிரியர்: மழைமானி, வெப்பமானி, பாகைமானி ஆகியவற்றைப் பற்றிப் படித்துவிட்டோம். இனிப் படிக்க வேண்டியமானி...?
மாணவர்: வர்த்தமானி.

ஒருவர்: இவர்தான் எங்க ஊர் சிறுத்தொண்டர்.
மற்றவர்: யாருக்காவது பிள்ளையைக் கறியாக்கிக் கொடுத்தாரா?
ஒருவர்: இல்லையில்லை. ஊரில் உள்ளவர்களுக்குச் சிறு, சிறு தொண்டுகள் செய்பவர்.

- ஏ. ரவிவர்மா
கரவெட்டி.

## வேண்டாம் தம்பி!'புட்போட்' பயணம்

-அ. அன்ரனி மனேகரன்-
(வவுனியா மகாவித்தியாலயம்)

புகைவண்டி அன்று தாமதமாகி வந்ததனுல் நான் யாழ்ப்பாண பஸ் நிலயத்தை அடையும்போது இரவு பத்து மணியைத் தாண்டிவிட்டது. எனது நல்ல காலத்துக்கு பருத்தித்துறை செல்லும் பஸ் ஒன்று புறப்பட ஆயத்தமாகிக் கொண்டு நின்றது. நான் பாய்ந்தோடிச் சென்று பஸ்ஸில் தொத்திக்கொண்டேன். சன நெரிசல் காரணமாக மக்கள் மிதிபலகையில் தொங்கிக்கொண்டு நின்ருர்கள். நானும் ஒரு காலும், ஒரு கையுமாக நின்றுகொண்டேன். என்ன செய்வது? இதுதானும் பட பஸ்ஸாம். இதை விட்டால் எப்படி அச்சுவேலி போய்ச் சேருவது?

இதற்கு முன்பெல்லாம் நான் மிதிபலகையில் பிரயாணம் செய்வோரை எண்ணி மனமிரங்கியதுண்டு. அடடா, விழுந்தான் எண்டால் பல்லும் போய் மூக்கும்போய் விடுமே என்று அன்றல்லவா எனக்கு உண்மை விஷயம் விளங்கியது. காற்ருடிக்குக்கீழ் படுத்திருப்பது போன்றதொரு பிரமை. இடையிடையே கொண்டக்ரரின் குரல் 'ரிக்கற்ஸ் 'ரிக்கற்ஸ்.' இஞ்ச இந்த 'புட்போட்'டிலை நிற்கிற தம்பியவை தயவு செய்து மேலே றுங்கோ... பிறகு அடி, கிடி விழுந்தால் என்னைக் குறை நினையாதையுங்கோ.'

ஆனுல் நாங்கள் காதில் விழுத்திஞல்தானே.

ஆரியகுளம் சந்தியை பஸ் கடந்துகொண்டிருந்தது. சினிமாப்படத்துக்குச் சுவரொட்டி ஒட்ட வந்த சிலர் திடீரென்று வாளிக்குள் கிடந்த பசையை அள்ளி பஸ்ஸை நோக்கி எறிந்தார்கள். 'எறிந்த பசை என்மீதா விழவேணும்?' எனது சேட் பின் பக்கம் முழுதும் ஒரே பசை. 'எனக்கு ஆத்திரம் ஆத்திரமாகத்தான் வந்தது; அத்துடன் வெட்கம் ஒருபுறம்; அடக்கமுடியாத சிரிப்பு மறுபுறம்; எறிந்த பசை நல்ல புளிச்ச பசையாக்கும். மணம் தாங்கமுடியவில்லை.

அன்றிரவு வீடு போய்ச் சேர்ந்ததும் சேட்டிலுள்ள பசையை கையால் வழித்து எறிந்துவிட்டுச் சேட்டைக் கதிரையில் போட்டுவிட்டேன். 'நாளைக்குத் தோய்த்துப் போடுவோம்' என்று சோம்பலான மனம் கூறியதை நானும் ஏற்றுக்கொண்டேன்.

அடடா கடவுளே! விடிய எழுந்து சேட்டைப் பார்த்தபோது அது சேட்டா?... கறையான் அரிச்ச கிடுகு மாதிரி அல்லவா கிடந்தது. சேட்டை எலி விளையாடிவிட்டது. புளிச்ச மாப்பசைக்கு எலி எங்கே என்றல்லவா இருக்கும்! அன்றிலிருந்து எவ்வளவு சனமானுலும் நான் தெண்டித்து பஸ்ஸினுள்ளே ஏறிவிடுவேன். 'புட்போட்'டில் நிற்பதில்லை.

### வாசகர் கடிதம்

வாரமலரை என் கையில் எடுத்ததும் மாணவர் எண்ணத்தில் கண்ணும் மனதும் சென்றுவிட்டன. இதனைப் பாடசாலையில் உள்ள மாணவர் அனைவரும் படிக்க வேண்டும். இதனைப் படிப்பதாலும், இதற்கு எழுதுவதாலும் அவர்கள் அறிவு வளர்ச்சியும் ஊக்கமும் பெறும். அவர்கள் திறமையை அறிய வாய்ப்பும் உண்டாகும். இதனையிட்டு மனம் குளிர வாழ்த்துகின்றேன்.

வருக! வருக! மாணவர் எண்ணமே!!

சு. நி. கருணனந்தன்.
நாயன்மார்கட்டு,

## நமது நூல் நிலையம்

### நூல்:வியாழபகவான் மாற்றப் பலாபலன்கள்

ஆசிரியர்: ஆயர்பாடி ஜோதிடர் வே. த. மயில்வாகனம். வெளியீடு: ஆயர்பாடி நிலையம், விலை: 2-00

வியாழபகவான் வருடம் ஒரு ராசியாக கர்க்கடக ராசியில் இடம்பெயர்வதால் நாட்டுக்கும் பன்னிரு ராசி வாரியாக பலாபலன்கள் தெளிவாக வெளியிடப்பட்டுள்ளது.

ஜோதிடரை நாடித்தான் வியாழபகவானின் மாற்றம் பற்றிய தன்மை, நமைகளை அறியும் நிலையைத்தவிர்த்து எவரும்தம்பலன்களை இலகுவாக அறிய வாய்ப்பண்டாக்கின்றது இந்நூல், ஜோதிடரிடமும் சென்ருல் இதைத்தான் சொல்லுவார் என்ற திருப்தி வாசகர் மத்தியில் ஏற்படக் கூடியதாக அமைந்துள்ளது போற்றுதற்குரியது. சிறு கைநூலானுலும் பொதுவில் எல்லாருக்குமே பயன்தர வல்லது. ஜோதிடத்தில் நம்பிக்கையுள்ளவர்கள் வாங்கிப் பயனுறுவர்.

-அண்ணன்

**Rio** (Jaffna)
Phone: 7607
Daily 4 Shows
Last Few Days
Peter Fonda,
DIAMOND
MERCENARIES

**நாகம்ஸ்**
(சுன்னாகம்)
தினசரி 6-45, 10-00
முத்துராமன்
சுஜாதா - பத்மப்பிரியா
உறவுசொல்லஒருவன்

**வெஸ்லி**
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
எம். ஜி. ஆர். - லதா
நினைத்ததை
முடிப்பவன்
(புதிய-பிரதி கலர்)

**REGAL** Jaffna
Daily at 4-45, 7- & 9-30 p. m.
The Story of a Love that Defied Death
Gamini Fonseka
in
'SEETHA DEVI'
Eastman Color (English)

**ஸ்ரீதர்** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - சாவித்திரி
நடித்த
படித்தால் மட்டும் போதுமா
(புதியபிரதி)

**வின்ஸர்** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்-சுஜாதா-சௌகார்ஜானகி-சுந்தரராஜ
நடித்த
பேரும் புகழும்

**ராஜா** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன்-ரஜனி-ஆலம்
சுதா-வை.விஜயா
நடித்த
மன்மத லீலை
(ஈஸ்ட்மன் கலர்)

**வெலிங்டன்** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஆனந்தன்
நானும் மனிதன்தான்

**லிடோ** (யாழ்.நகர்)
போன்: 7692
சிவகுமார், அல்கா
மதனமாளிகை

இன்று மட்டும்
**மனோகரா** (யாழ்ப்பாணம்)
(புத்தம் புதிய பிரதி)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - பத்மினி
செந்தாமரை

**ராணி** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-மஞ்சுளா
நடித்த
உத்தமன்
(ஈஸ்ட்மன் கலர்)

**சாந்தி** யாழ்நகர். போன்: 7642
தினசரி 10-30, 2-30, 6-30. 9-45காட்சிகள்
காட்சிக்குக் காட்சி அலைமோதும் ரசிகர்கள் கூட்டம்!
பார்த்துப் பரவசமடைந்தவர்கள் மீண்டும்
பார்க்கும் நோட்டம்!
ரகுநாதன்... குமுதினி ...சந்திரகலா... தனரத்தினம்
நடித்த
தேன் சுவையூட்டும் தீந்தமிழ் கீதம் மலிந்த
தெய்வம் தந்த வீடு
(சினிமாஸ் கோப்)



ஜெர்மனியில் தயாராகும் 'ஓர்வோ' புகைப்படச்சுருள் நிறுவனத்தின் ரசாயனப் பொறியியலாளர் டாக்டர் மூனிச் தமது புகைப்பட சுருள் தயாரிப்புப் பற்றி யாழ். சுபாஸ் விடுதியில் ஞானம்ஸ் ஸ்ருடியோவினரால் ஒழுங்கு செய்யப்பட்ட கருத்தரங்கில் விபரிக்கிறார். அருகே ஞானம் ஸ்ருடியோ மனேஜரையும் மற்றும் சிலரையும் காணலாம்.

# தமிழ் தேசிய

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மானம் மாநாட்டில் எடுக்கப்படவேண்டிய அவசியமில்லையென்றும், அவசியம் ஏற்படும்போது கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர்கள் கொண்டுவருவார்கள் என்றும் இளைஞர்களுக்கு உறுதியளிக்கப்பட்டதால், அவ்விடயம் கைவிடப்பட்டதாகத் தெரியவருகிறது.

அகதிகள் பிரச்னையை கவனித்து அவர்களுக்குப் புனர்வாழ்வளிப்பதுடன் தமிழ் மண்ணைக் காப்பாற்றும் விடயத்திலேயே கூட்டணி உடனடியாகக் கவனம் செலுத்த வேண்டுமென்ற கருத்து ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டதாகத் தெரியவருகிறது.

## மாவட்டமந்திரி பதவி

மாவட்டமந்திரி பதவிபற்றிய பேச்சு எழுந்தபோது ஆரம்பத்திலேயே கூட்டணித்தலைவர் திரு. சிவசிதம்பரம் அது பற்றி தற்போது ஆலோசிக்க வேண்டிய அவசியம் இல்லையெனக்கூறிவிட்டதால் அதன் பின் அப்பேச்சு எடுக்கப்படவில்லையெனத் தெரிய வருகிறது.

மாவட்ட மந்திரி பற்றிய விஷயத்தை திரு. வீரசுப்பிரமணியம் கிளப்பி இதனால் தமிழினத்திற்கு நன்மையுண்டா என ஆராயவேண்டும் எனவும் கிழக்கில் குறிப்பாக திருமலையில் சிங்களக் குடியேற்றத்தை தடுக்கக் கூடியவிதத்தில் குடியேற்றம் காணிப்பங்கீடு மாவட்டமந்திரியிடம் ஒப்படைக்கப்படவிருப்பதாகவும் தெரிவித்தார் எனத்தெரியவருகின்றது.

ஒரே தடவையில் மூன்று இளைஞர் பேரவையினர் எழுந்து மாவட்டமந்திரி பதவியினால் தமிழினத்துக்கு ஆபத்தெனக் கூறியதாகவும் தெரியவருகிறது.

## தமிழ்ஈழத்துக்கு மட்டுமே அனுமதி

தமிழ்மக்கள் தமிழ் ஈழம் அமைப்பதற்குத்தான் அனுமதித்தார்களென்று சட்டத்தரணி ஆர். விஸ்வநாதன் கூறியதாகவும் தெரியவருகின்றது.

மாவட்டமந்திரிபற்றி திட்டவட்டமாக அரசு எதுவும் தெரிவிக்காததினால் அதுபற்றிய ஆலோசனையை தற்போது எடுக்க வேண்டிய அவசியமில்லையென தலைவர் திரு. எம். சிவசிதம்பரம் கூறி அந்தபேச்சுக்கு முற்றுப்புள்ளி வைத்தார் எனத்தெரிய வருகிறது.

திருமலை எம். பி. திரு. இ. சம்பந்தன் விஷய ஆலோசனைக்கூட்டத்தில் திருமலை பற்றி கூறிய கதைகள் பொதுச்சபை உதுப்பினர்களை கண் கலங்க செய்ததாம்.

ஒருகட்டத்தில் அவர்தாம் காலையில் வீட்டைவிட்டு புறப்படும் பொழுது மீளவும் உயிருடன் திரும்புவேனோ எனத்தமக்கே சந்தேகம் ஏற்படுவதாக அவர் கூறியதாக தெரியவருகிறது. அவர் மேலும் திருமலை சிங்களக் குடியேற்றம் பற்றி விபரிக்கையில் தான் கண்துயிலக்கூட இயலாதிருப்பதாகவும் தாம் கண்மூடி கண்திறப்பதற்குள் சிங்களக்குடியேற்றம் நிகழ்ந்து விடுகிறதென்றும் கூறினார் என்றும் தெரியவருகிறது.

இவ்விதமாக யாழ். குடாநாட்டுக்கு வெளியே உள்ள சூழ்நிலைகள் பற்றி கிழக்கு மாகாண எம். பிக்கள் அடுத்தடுத்து விளக்கிய பின்பே தமிழ் இளைஞர்கள் ஓரளவு மனச்சாந்தி அடைந்து உக்கிரமமான தங்கள் தீர்மானங்கள் எடுப்பதை ஓரளவுக்கு ஒத்திவைத்தனரெனத் தெரியவருகிறது. இது ஒருபுறமிருக்க தமிழ் இளைஞர்கள் எந்நேரத்திலும் வெளிநடப்புச் செய்யலாம் என்னும் பதட்டநிலை வெளியே நின்ற இலைஞர் மத்தியில் நிலவிய போதிலும் இளைஞாகள் திரு. அமிர்தலிங்கத்தின் மேல் தமக்குள்ள நம்பிக்கையைப் வெளிபடுத்தும் முகமாக மிகவும் நிதானத்துடனும் நடந்து கொண்டனர். (கி-க)

# மாநாட்டுச் செய்திகள்

## செல்வா சமாதிக்கு அஞ்சலி

தமிழர் விடுதலைக் கூட்டணியின் 2-வது தேசிய மகாநாடு ஆரம்பமாவதற்கு முன் தலைவர்களும் மற்றும் பிரமுகர்களும் யாழ். நகரிலுள்ள செல்வாவின் சமாதிக்கு மலரஞ்சலி செலுத்திய பின்னர் மகாநாட்டு மண்டபத்தை வந்தடைந்தனர்.

## அதிர்வெடி மரியாதை

ஆவரங்காலையே அதிரச் செய்யக்கூடிய முறையில் அதிர்வெடிகளை வெடிக்கச் செய்து மகாநாடு ஆரம்பித்து வைக்கப்பட்டது. இராணுவ மரியாதை வேட்டுச்சத்தம் போல் இவ்வெடிகள் அதிர்ந்தன.

## தலைவர்களுக்கு அஞ்சலி

மகாநாடு ஆரம்பமாவதற்கு முன்னர் மறைந்த தலைவர்களுக்கும், தொண்டர்களுக்கும் 2 நிமிட அஞ்சலி செலுத்தப்பட்டது.

## அமெரிக்கசெயலாளரை கவர்ந்தது

மாநாட்டுக்கு வந்திரிந்த நான்கு கிராமியச் சிறுவர்கள் மகாநாட்டில் தம்மை மறந்து பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்த காட்சியை கண்டு பரவசமடைந்த இலங்கை-அமெரிக்க தூதரக முதலாவது செயலாளர் 'கிளிக்' என தமது காமராவுக்குள் அக்காட்சியை அடக்கிக் கொண்டார்.

## 'இளைஞர் குரல்'

தமிழ் இளைஞர் பேரவை உறுப்பினர் சிலரால் வெளியிடப்பட்ட 'இளைஞர் குரல்' என்னும் பத்திரிகை இளைஞர் மகாநாட்டில் வெளியிடப்பட்டது. எதிர்க்கட்சி முதல்வரால் வெளியீடு செய்துவைக்கப்பட்ட இப்பத்திரிகையின் முதல் ஆறு பிரதிகளும் முறையே கூட்டணித்தலைவர் திரு சிவசிதம்பரம்' திருமலை எம். பி. திரு-இரா. சம்பந்தன், வவுனியா எம், பி. திரு. தா. சிவசிதம்பரம். இ. தொ. க. செயலாளர் எம். எஸ். செல்லச்சாமி, பட்டிருப்பு எம். பி. திரு. பி. கணேசலிங்கம், முஸ்லிம் ஐக்கிய முன்னணி பொதுச்செயலாளர் ஜனுப் சம்சுதீன் ஆகியோருக்கு வழங்கப்பட்டது.

## கரகோஷம்

விவசாய தொழிலாளர் மகாநாடு நடைபெற்றுக்கொண்டிருந்த பொழுது இ. தொ. க. செயலாளர் திரு. எம். எஸ். செல்லச்சாமி வந்து சேர்ந்தார். அப்போது மாநாட்டில் இருந்தவர்கள் அவரைப் பலத்த கரகோஷம் செய்து வரவேற்றனர். திரு. செல்லச்சாமி மேடையில் அமர்ந்தார்.

## தனியான தொழிற்சங்க அமைப்பு

விவசாயிகள் தொழிற்சங்க ரீதியில் இணைந்து விவசாயிகளுக்கென தொழிற்சங்க அமைப்பு உருவாக்கவேண்டும்.

-செல்லச்சாமி

ரூபாயின் பெறுமதி 79 ஜனவரி மாதத்துக்கிடையில் இருபத்தைந்து வீதத்தால் குறையும். -துரைரத்தினம்

உலகிலேயே சனத்தொகை செறிவு கூடிய பிரதேசம் எமது பிரதேசமே. 9000 மக்கள் சதுரமைல் ஒன்றுக்கு வாழ்கிறார்கள்.

-துரைரத்தினம்

## பிரி. மேற்கு ஜேர்மன் தூதுவர்கள் கவலை

(ஆவரங்கால்)

பிரிட்டிஷ் தூதுவரும் மேற்கு ஜெர்மன் தூதுவரும் தமக்கு மகாநாட்டில் கலந்து கொள்ள வசதி கிடைக்கவில்லையென எழுத்து மூலம் கவலை தெரிவித்துள்ளனர். (கி)

## திருக்குர்- ஆன் அன்பளிப்பு

(ஆவரங்கால்)

புத்தளம் முஸ்லிம் மக்களின் சார்பாக தமிழர் விடுதலைக்கூட்டணித்தலைவர் திரு. எம். சிவசிதம்பரத்துக்கு திருக்குர்-ஆன் நூல் ஒன்று இன்று அன்பளிப்புச் செய்யப்பட உள்ளது.

## இன்று

வண்ணை சிவன் கோயிலில் தேவி மகோற்சவம் 3-ம் திருவிழாவாகிய இன்று பகல் திருவிழா 9 மணிக்கு அம்மன் பூஜையாகி மஞ்சத்தில் உள்வீதி வலம் வருதலும் மாலை திருவிழா 6-30 மணிக்கு வசந்த மண்டப பூஜையாகி அன்ன வாகனத்தில் அம்மன் வெளிவீதி வலம் வருதலும் இரவு 9 மணிக்கு அர்த்தசாமப்பூஜையும் நடைபெறும்.

## பக்தி.,.

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

சிப்பதற்குப் பெயர்கூடப் பக்திதான். இந்தப் பக்தி சிலருக்குக் கடவுள் மீது உண்டாகிறது. சிலருக்கு உலகின்மீது அதன் செயல்களின் மீதுமுண்டாகிறது. எந்தப் பக்தியுமேஒருமுகப்படுத்தப்பட்ட சிரத்தையுடன் இல்லாவிட்டால் தோல்வியே அடைகிறது. இது கடவுள் பக்திக்கும் பொருந்தும் உலகில் பக்திக்கும் பொருந்தும். பக்தி என்பது Consentration with emotional interest தான். இதைத்தான் புரிந்துகொள்ள வேண்டும்,

(தொடரும்)

## உங்கள்...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

இப் பிள்ளைகளின் வாழ்க்கை எப்படி?

அவர்கள் நன்முசவே வாழ்வார்கள்,

எனது மூத்த பெண்ணுக்கு எப்போது விவாகம் நடைபெறும்?

இரண்டு ஆண்டுகள்கழித்து.


எனது துன்பம் எப்போது தீரும்?

5 வருடம் தாக்குப் பிடியுங்கள்போதும்.

சி. இராமநாதன்
யா/குடத்தனை அ. த. க. பாடசாலை; குடத்தனை.

எனது மூத்தமகள் செல்வி இ. குமுதநாயகி எப்போது திருமணமாவார்?

இவ்வாண்டு இறுதியில்நடைபெறும்.



ஆவரங்காலில் நேற்றுக் காலை தமிழர் விடுதலைக் கூட்டணியின் இரண்டாவது தேசிய மகாநாடு ஆரம்பமாவதற்கு முன் தலைவர்கள் சிவன் கோவில் சுவாமி தரிசனம் செய்து பிரசாதம் பெறுவதை முதற் படத்திலும் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம் உதயசூரியன் கொடியை ஏற்றிவைப்பதை 2-வது படத்திலும் மேடையில் தலைவர்கள் அமர்ந்திருக்க திரு. சி. கதிரவேலுப்பிள்ளை வரவேற்புரை நிகழ்த்துவதை 3-வது படத்திலும் காணலாம். படம் (பிரபா போட்டோ) 'தேவா'

# மங்கள இசை முழங்க "வாழ்க ஈழத் தமிழகம்" ஒலிக்க உதயசூரியன் கொடி உயர ஏறியது

## கூட்டணி மாநாடு கோலாகலமாக ஆரம்பம்

(நமது நிருபர் கா. யோகநாதன்)

(ஆவரங்கால்)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் 2-வது தேசிய மாநாடு ஆவரங்கால் சிவன்கோவில் முன்றலில் உதய சூரியன் கொடியேற்ற நிகழ்ச்சியுடன் ஆரம்பமானது. தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம் 'வாழ்க ஈழத் தமிழகம்' என்ற கீதம் இசைக்க, தொண்டர்கள் அணிவகுத்து நிற்க, மேள வாத்திய இசை முழங்க, பலத்த கரகோஷம் மத்தியில் உதயசூரியன் கொடியை ஏற்றி வைத்தார்.

கொடியேற்ற நிகழ்ச்சியின் போது கூட்டணி எம். பிக்களும், இளைஞர் பேரவையினரும், மகளிர் பேரவையினரும் திரண்டு நின்னர். ஆகாயத்தில் அடுத்தடுத்து 'அவிட்டு' முழங்கிக்கொண்டிருந்தது.

காலைமுதலே நாலாபக்கங்களிலிருந்து மக்கள் மாநாட்டு பந்தலை நோக்கித்திரண்டனர். அச்சுவேலி, புத்தூர், கோப்பாய், இருபாலை, மற்றும் சுற்றுக் கிராமங்கள் எல்லாம் சிகரங்களினாலும், உதயசூரியன் கொடிகளினாலும் அலங்கரிக்கப்பபட்டிருந்தன.

யாழ். பஸ் நிலையத்திலிருந்து மாநாட்டுப் பந்தலுக்கு காலை முதல் விசேட பஸ் சேவை ஒழுங்கு செய்யப் பட்டிருந்தது.

காலை 9 மணிக்கு ஆவரங்கால் சிவன் கோவிலில் நடந்த விஷேட பூசையில் கூட்டணி எம். பிக்களும் பிரமுகர்களும் கலந்துகொண்டனர். கோவிலிலிருந்து மேளவாத்தியத்துடன் தலைவர்கள் ஊர்வலமாக மாநாட்டு முன்றலுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

இளைஞர்களும், மகளிரும் சிறுவர்சிறுமியர்களும் சீருடை அணிந்து உதயசூரியன் 'பட்ஜ்' அணிந்து முன்றலில் அணிவகுத்துநின்றனர்.

### தொண்டர்கள் அணிவகுப்பு

இளைஞர் பேரவை சகலருக்கும் உதயசூரியன் பட்ஜ் வழங்கினார்கள். கொடியேற்றத்தைத் தொடர்ந்து மகளிர் 'வாழ்க ஈழத் தமிழகம்' என்ற இயக்கப் பாடலை இசைத்தபோது தொண்டர்கள் அணிவகுத்து நின்றனர்.

வீதிக்கு அப்பால் நின்ற பொலிசாரும் அமைதியாக நின்றனர்.

இதன் பின், சிதம்பரம் ஜெயராமனால் பாடப்பட்ட 'வாழ்க ஈழத் தமிழகம்' என்ற பாட்டின், ஒலிபரப்பு போடப்பட்டபோது எல்லோரும் அமைதியாக நின்றனர். அதன் பின் தலைவர்கள் மேடைக்கு அழைத்துவரப்பட்டனர்.

பார்வையாளர் வரிசையில் செந்தமிழ் இயக்கத்தலைவர் திரு. வி.பொன்னம்பலம் முதலாவதாக மேடைக்கு அருகில் அமர்ந்திருந்தார், அமெரிக்க ஸ்தானிகராலயத்தைச் சேர்ந்த 1-வது செயலாளர் திரு. டிபோல், திரு சந்திரே ஆகியோரும் வந்திருந்தனர்.

மாநாடு ஆரம்பிக்கப்பட்ட போதே மாநாட்டுப்பந்தல் நிரம்பி வழிந்த, கோவில் வீதியிலும், ரோட்டுக்கு அப்பாலும், மக்கள் திரண்டிருந்தனர். மாநாட்டுப் பந்தலின் ஒரு பக்கத்தில் பெருந்திரளாக மகளிர் திரண்டிருந்தனர்.

மேடையில் கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம் உதயசூரியன் சால்வை அணிந்திருந்தார். அவருக்கு வலது பக்கத்தில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஏ. அமிர்தலிங்கமும், இடது பக்கத்தில் பண்டிதர் கா. பொ. இரத்தினமும் மற்றும் கூட்டணி எம். பிக்களும், மகளிர்பேரவையினரும், இளைஞர் பேரவையினரும் அமர்ந்திருந்தனர்.

அமரர் ஜி. ஜி. பொன்னம்பலம்அரங்கில் விவசாயிகள். தொழிலாளர்மாநாடு ஆரம்பமானபோதுஅருகில்உள்ள வீட்டில் விஷயாலோசனைக்கூட்டம் ஆரம்பமானது.

கல்முனையிலிருந்து வேல் முருகு மாஸ்டர் தலைமையில் 50 பேர் வந்திருந்தனர். திருகோணமலையிலிருந்து இளைஞர் பேரவையைச்சேர்ந்த திருவாளர்கள் என். ஸ்ரீகந்தராஜா, செ. சிறிஸ்கந்தராசா, வேல் சுப்பிரமணியம், ஈழத்துநாதன் ஆகியோர் தலைமையில் 50 பேர் வந்திருந்தனர். மலைநாட்டிலிருந்துப் 25 பேர் வந்திருந்தனர். கொழும்பு கூட்டணிக் கிளையிலிருந்து 60 பேர் வந்திருந்தனர்.

அமெரிக்கதூதரக முதலாவது செயலாளர் திரு. டி. போலை செயலதிபர் திரு. ஏ. அமிர்தலிங்கமும் யாழ், எம்.பி.திரு. வி. யோகேஸ்வரனும், திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளையும் மாநாட்டுப் பந்தலில் சந்தித்து கலந்துரையாடினர்.

### வெளிநாட்டுப் பிரமுகர்கள்

இந்த மகாநாட்டிற்கு தாங்கள் மிகுந்த அக்கறையுடனும் ஆர்வத்துடனும் வந்திருப்பதாக அமெரிக்க தூதுவராலய முதலாவது செயலாளர் திரு. டி. போல் எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஏ. அமிர்தலிங்கத்திடம் கூறினார்.

தாங்கள் பிளேனுக்குப் புக் பண்ணியிருந்ததாகவும்' பிளேன் கிடைக்காததினால் தனிப்பட்ட கார் பிடித்து மாநாடு ஆரம்பமாகுமுன்னரே வந்து சேர்ந்துவிட்டதாகவும் அமெரிக்க தூதுவராலயத்திலிருந்துவந்த திரு. சந்திரே தெரிவித்தார்.

கூட்டணித் தலைவர்கள் பின் அவர்களிடமிருந்து விடை பெற்றுக்கொண்டு விஷயாலோசனைக் கூட்டத்திற்குச் சென்றுவிட்டனர்,

இதன்பின் அவர்கள் செந்தமிழ் இயக்க செயலாளர் திரு. பொன்னம்பலத்துடன் பார்வையாளர் பகுதியிலிருந்து உரையாடிக்கொண்டிருந்தனர்.

இதுதானா முதலாவது மாநாடு என அமெரிக்க தூதுவராலயத்திலிருந்துவந்த திரு. சந்திரே கேட்டபோது, இது இரண்டாவது தேசிய மாநாடு என்றும், முதல்மாநாடு வட்டுக்கோட்டையில் நடந்ததாகவும் கூறினார்.

வவனியாவில்நடந்ததென்ன என்று திரு. சந்திரே கேட்டபோது, அது கூட்டணியின் பொதுச்சபைக்கூட்டம் என்று திரு. பொன்னம்பலம் விளக்கினார்.

வெளிநாட்டிலிருந்து பத்திரிகை நிருபர்களும்,படப்பிடிப்பாளரும் வத்திருந்தனர்.

அமரர் ஜி. ஜி. பொன்னம்பலம் அரங்கில் ஆரம்பமான விவசாயிகள். தொழிலாளர் மாநாட்டுக்கு பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம் தலைமைதாங்கினார்.

திரு.துரைரத்தினம் தமிழில் பேசியவற்றை திரு. வி. பொன்னம்பலம் அமெரிக்க தூதவராலய முதலாவது செயலாளர் திரு. டி போலுக்கு ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துக் கூறிக் கொண்டிருந்தார்.

## குடிகாரனை...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

யொன்றின் முகாமையாளர் ஒருவர் அந்த இளைஞருக்கு உடனடியாகவேதமது வங்கிக்கிளையில் வேலையொன்றை வழங்குவதாக உறுதி கூறினார்.

இதுபற்றி ஒரு கூட்டத்தில் குறிப்பிட்ட தமிழ்நாடு ஆளுனர் மதுவிலக்கை வெற்றிபெறச் செய்வதற்கு இப்படியான மனவைராக்கியம் நாட்டில் எல்லாருக்கும் வரவேண்டும் என்றார்.

## ஒரு பக்கம்......

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கலையும் தடுத்து, தனது இன வெறியைக் காட்டிக்கொள்கிறது' கலவரத்தையே அடக்க முடியாமல் அது தானாய் அடங்கும்வரை சும்மா பார்த்துக்கொண்டிருந்தது. இன்னும் தமிழ் ஈழத்தைச் சிங்களக் குடியேற்றத்தால் மேலும் பிடித்துக்கொள்ளலாம் என்று இயங்குகிறது. இது ஒருபக்கத்தில் தொடர்ந்து நடக்கும் ஆக்கிரமிப்பாக இருக்கிறது. இப்படி ஒரு பக்கத்தில் சிங்கள ஆக்கிரமிப்பும் இனவெறியும் பலாத்காரமும் தொடர்கிறது. மறுபக்கத்தில் இன்றைய சிங்கள அரசு உலக அபிப்பிராயத்தைக் கணித்து தமிழ் மக்களை சில சலுகைகள் கொடுத்துச் சேர்த்து வாழ முயற்சிக்கிறது. புதிய அரசியல் அமைப்பில் மொழியுரிமை சம்பந்தமான திருத்தங்கள் இதனைக் காட்டுகிறது. ஆனால் மொழியைப் பெற்று நிலத்தை இழப்பது அழிவுக்கு வழியாக அமையும். ஆகவே எமது நாட்டைக் காப்பதே விடுதலை இயக்கத்தின் முதற்கடமையாகும். இப்படி சகல விஷயங்களையும் ஆராய்ந்துபார்த்தால் சிங்கள நாட்டில் எந்தத் தமிழ் மக்களும் இனிவாழமுடியாது. நாம் வாழவேண்டுமென்றால் தமிழ் மக்கள் எல்லோரும் தமிழ் ஈழத்திற்கு வந்து குடியேறித் தங்கள் நாட்டைத் தாங்களே ஆளவேண்டும், இது தவிர்க்க முடியாத நிலையாகும். ஆகவே அபிவிருத்தி என்ற போர்வை ஒத்துழைப்புக்கு அழைக்கப்படும் அரசியல் நிலையைநாம்மிகவும் ஆழமாக ஆராய்ந்து செயல்படவேண்டும். அபிவிருத்தியே சிங்களக் குடியேற்றத்தின் முனையாக இருப்பதை நாம் அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது. இன்னொரு பக்கத்தில் ஒத்துழைப்புக்கு அழைக்கும் இந்த அரசாங்கம் தமிழ் ஈழக் கோரிக்கையை விடுதலை இயக்கத்தைத் தொடர்ந்து நாம் நடத்தினால் புதிய தண்டனைகளை உருவாக்குகிறது. சென்ற அரசாங்கம் அவசரகால சட்டமாக வைத்திருந்த தடைகளை இந்த அரசாங்கம் அடிப்படைஅரசியல்சட்டமாக அமைக்கிறது இப்படிப்பட்ட அரசியல் சூழ்நிலையில் நாம் நிதானத்தோடும்துணிவோடும் ஆழமான அறிவோடும் இயங்க வேண்டும். நாமெல்லோரும் ஒற்றுமையாகச் சேர்ந்து சிந்தித்து ச்செயலாற்றும் நிகழ்வாக இந்த மாநாடு அமைய வேண்டும்.

சீ-நோர்
மீன்பிடி வலைகள்
எங்களுடைய மீன்பிடி வலைகளையும் உபகரணங்களையும் விற்பனை செய்ய விற்பனை முகாமையாளர்கள் (AGENTS) இலங்கை பூராவும் தேவை.
உடன் தொடர்புகொள்ளவும்.
வர்த்தக முகாமையாளர்
சீ-நோர், காரைநகர்.
9921

OMAX
QUALITY WATCHES

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1978-ம் ஆண்டு ஜுலை மாதம் 30-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
The Eelanaadu, Post Box No: 49, Jaffna - Telegram: Ealanaadu - Telephone: 389 - Registered as a News paper in Sri Lanka.